# அல் ஜன்னத்

மாத இதழ்

## AL JANNATH TAMIL MONTHLY

July 2021 ₹20 DulKahda - Dhulhaj 1442




## உழ்ஹிய்யாவின் சட்டங்கள்

## துல்ஹஜ் முதல் பத்து நாட்கள்

# அல்ஹுதா அநாதை இல்லம்

14, ஸலஃபி நகர், ஏர்போர்ட், திருச்சி – 7.
தொலைபேசி: 0431-2340447, 9362340447, 9443154648, 9443364640

அல்ஹுதா அநாதை இல்லம், திருச்சி, விமான நிலையத்திற்கு அருகாமையிலுள்ள ஸலஃபி நகரில் 1994 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இதில் தற்போது 400 அநாதை மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு மார்க்கக் கல்வி, உலகக் கல்வி மற்றும் தேவையான எல்லா வசதிகளும் சிறப்பான முறையில் செய்து கொடுக்கப்படுகிறது. இந்த இல்லத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.15,00,000/- (பதினைந்து இலட்சத்திற்கு) மேல் செலவிடப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

**தங்கள் பகுதியில் உள்ள அநாதை மற்றும் ஆதரவற்ற மாணவ, மாணவிகளை இவ்வில்லத்தில் சேர்த்து பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.**

## அல்ஹுதா நிறுவனங்கள்

- S.S.V துவக்கப் பள்ளி
- அல்ஹுதா மேல்நிலைப் பள்ளி
- இஸ்லாஹியா அரபிக் கல்லூரி (ஆண்கள்)
- இஸ்லாஹியா அரபிக் கல்லூரி (பெண்கள்)
- அல்ஹுதா மாணவர்கள் இல்லம்
- அல்ஹுதா மாணவிகள் இல்லம்
- அல்ஹுதா விதவைகள் இல்லம்
- அல்ஹுதா கம்ப்யூட்டர் சென்டர், நூலகம்
- அல்ஹுதா ஹிஃப்ள் (குர்ஆன் மனன) மத்ரஸா

ஆன்லைன் அட்மிஷன் நடைபெறுகிறது

தங்கள் D.D.. M.O மற்றும் Cheque ஆகியவைகள் Al-Hudha Orphanage என்ற பெயரில் அனுப்பவும்

ICICI A/C No. 613201205878 (K.K. Nagar Branch)
IFSC Code: ICIC0001563

IOB A/C No. 046702000000066 (JMC Branch)
IFSC Code : IOBA0000467

Approved by the income tax (Exemptions)
Registration No.C.No.7162E(134)/06-07/CIT-II/TRY/80G Dt.24.6.2016
தங்கள் நன்கொடைகள் வருமான வரிக்கு உட்பட்டது

33 ஆண்டுகளை கடந்து

# அல்ஜன்னத்

இஸ்லாமிய மாத இதழ்

ஜுலை 2021 / துல்கஃதா - துல்ஹஜ் 1442 / மலர்:22 இதழ்: 6

ஆசிரியர்

**S.கமாலுத்தீன் மதனி**

+91 94434 53943

skmadani@gmail.com

துணை ஆசிரியர்கள்

**M.அப்துர் ரஹ்மான் மன்பஈ**

**M.பஷீர் ஃபிர்தவ்ஸி**

இதழ் வடிவமைப்பு

**மதார்ஷா ஃபிர்தவ்ஸி**

சந்தா விவரம்:

| | |
|---|---|
| தனி பிரதி | : ₹ 20/- |
| ஆண்டுச் சந்தா | |
| உள்நாடு | : ₹ 240/- |
| வெளிநாடு | : ₹ 1100/- |

சந்தா தொடர்புக்கு : 044-4214 8190, 9884768199

**AL JANNATH - INDIAN BANK**

A/C NO. 782638522

Branch No. 403, Adhithanar Salai,

Chennai - 2.

IFSC Code: IDIB000A090

விளம்பர விவரம் : முழு வண்ணப் பக்கம்

| | |
|---|---|
| பின் பக்கம் (ரேப்பர்) | : ₹ 8000/- |
| உள் பக்கம் (2வது ரேப்பர்) | : ₹ 6000/- |
| உள் பக்கம் (3வது ரேப்பர்) | : ₹ 5000/- |

கறுப்பு வெள்ளை

| | |
|---|---|
| முழுப் பக்கம் | : ₹ 2000/- |
| அரை பக்கம் | : ₹ 1000/- |
| கால் பக்கம் | : ₹ 500/- |

விளம்பர தொடர்புக்கு : 044 - 4214 8190
+91 9884768199

முகவரி

61/26, அய்யாசாமி தெரு, புதுப்பேட்டை, சென்னை -2.

aljannath_monthly@yahoo.co.in

jaqhaljannath@gmail.com www.jaqh.org



بسم الله الرحمن الرحيم

# الجنة

مجلة إسلامية شهرية

தமிழகத்தின் புதிய அரசு சமூக நீதியை நிலைநாட்டட்டும்.. 4

உழ்ஹிய்யாப் பிராணிகளை எப்போது பலியிட வேண்டும்..? 6

உழ்ஹிய்யாவின் சட்ட திட்டங்கள் 10

துல் ஹஜ் முதல் பத்து நாட்கள் 16

இதுதான் ஆர்.எஸ்.எஸ் 18

அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கான பகுத்தறிவு ஆதாரங்களும் மனித இயல்பு ரீதியான ஆதாரங்களும் 31



# தமிழகத்தின் புதிய அரசு
# சமூக நீதியை நிலைநாட்டட்டும்..

நாட்டின் ஆட்சி மாற்றங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் நடந்துகொண்டே இருக்கின்றன. ஒரு சாரார் தங்களுடைய கையில் ஆட்சி வந்து விடும் போது அதை பயன்படுத்தி நாட்டு மக்களின் நலனுக்காக பாடுபடுகிறார்களோ, இல்லையோ தங்களுடைய வாழ்க்கையை வளமாக்கிக் கொள்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொள்கிறார்கள். தேர்தலில் போட்டியிட்டு வெற்றியை தட்டிச்செல்வதற்காக வாரி இறைத்த பணத்தையும், அதற்காக இரட்டிப்பான லாபத்தையும் பெற்றுக்கொள்வதற்கு பதவியை பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

தங்களுடைய நச்சுக் கருத்துக்களை மக்களிடையே விதைக்கின்ற வேலையை செய்வதில் கவனமாக செயல்படுவார்கள். தங்களுக்குப் பிடிக்காத எதிர் அணியினரை பழிவாங்கும் வேலையை செய்வதிலும் அவர்கள் பின் வாங்குவதில்லை. ஒவ்வொரு துறை சார்ந்த அமைச்சர்களும் தங்கள் துறையின் மூலம் வருவாய் ஈட்டுவதற்கான வழி என்ன? துறையில் செயல் திட்டங்களுக்கான டெண்டர்களை தொழில் சார்ந்த நெருங்கியவர்களுக்கு எவ்வாறு வழங்கலாம்? என்பதில் தங்கள் கவனத்தை செலுத்துவார்கள். இது ஆட்சி நடத்தும் எல்லாக் கட்சிக்காரர்களிலும், நாட்டின் எல்லா மாநிலங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் எதார்த்த நிலை. இதிலிருந்து யாராவது ஒருவர், இருவர் அரிதாக விதிவிலக்காக காணப்படலாம்.

தமிழ்நாட்டை பொறுத்தவரையில் கடந்த 10 ஆண்டு காலமாக ஒருசாரார் ஆட்சியை தங்கள் கையிலேயே வைத்திருந்தனர். அந்த காலகட்டத்தில் அவர்கள் மேலே குறிப்பிடப்பட்டது போன்று ஆட வேண்டியதெல்லாம் ஆடி, தேட வேண்டியதெல்லாம் தேடி முடிந்தபின் ஆட்டம் அடங்கி ஆட்சியும் கலைந்தது. அடுத்து 10 ஆண்டுகளாக எப்போது இவர்கள் வீழ்வார்கள் நாம் அரியணை ஏறி விடலாம் என கொக்கு போன்று காத்திருந்தவர்கள் எப்படியோ நாட்டின் ஆட்சியை கைப்பற்றி விட்டார்கள். நாட்கள் 40 கடந்துவிட்டன.. நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதாக நாடெங்கும் பேசப்படுகிறது.. நோய்த்தொற்றின் காரணத்தினால் பொருளாதார சிக்கலில் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு தலா 4 ஆயிரத்தை வழங்கியுள்ளது.. பெண்களுக்கு இலவச பஸ் பயணம் அறிவிக்கப்பட்டுள்ளது.. இன்னும் பல நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஊழலில் ஈடுபடக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கையும் பாயும் என அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. மக்களின் கோரிக்கை மனுக்களுக்கு உடனுக்குடன் பதில் அளிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

புதிதாக பதவியேற்றுள்ள ஆட்சியாளர்களின் துவக்கம் துலங்குவதாக தெரிகிறது.. இது தொடரவேண்டும்! தேர்தலின் போது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆட்சியாளர்கள் தவறி விடக்கூடாது. கடந்த ஆட்சியாளர்கள் செய்த தவறுகளை இவர்கள் செய்வார்களானால் மக்கள் தகுந்த பாடம் புகட்ட தயங்க மாட்டார்கள். கடந்த ஆட்சியின்போது மதுக்கடைகளை மூடுமாறு பதாதைகளை ஏந்தி கோஷம் போட்ட இன்றைய ஆட்சியாளர்கள், மதுக்கடைகளை மூட நடவடிக்கை எடுக்கவேண்டும். 'குடி குடியை கெடுக்கும்' என்ற சொல்லிற்கேற்ப பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை மது நாசமாக்கிக் கொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்களின் சுய நினைவை இழக்கச் செய்கிறது; போதையின்போது பகுத்தறிவை பறி கொடுத்துவிடுகிறார்கள். கண் முன்னால் நிற்பது யார்? என்று கூட அவர்களால் பாகுபடுத்தி பார்க்க முடியாத நிலைக்கு போதை அவர்களை ஆக்கி விடுகிறது! இந்த அரசு பதவி ஏற்ற ஒரு சில நாட்களே ஆன நிலையில் திருவண்ணாமலையில் போதை தலைக்கேறிய ஒருவன் தனது மகள் என்று கூட பார்க்காமல் அவளை கற்பழிக்க முனைந்தான்.. இதனால் ஆத்திரமடைந்த மகள் தகப்பனை கொலை செய்தாள் என்ற செய்தியை தொலைக்காட்சியில் பார்த்தோம். இதுபோன்று ஆயிரமாயிரம் நிகழ்வுகள் நாடு முழுக்க நடந்துகொண்டே இருக்கின்றன. இதற்கு காரணம் மதுதான்! பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற கட்சியை சார்ந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்துகொண்டு பகுத்தறிவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற மதுக்கடைகளை நடத்துவது எந்த வகையிலும் நியாயமற்றது.

சமூக நீதியை நிலைநாட்டுவது தான் எங்கள் தலையாய கொள்கை என்று மக்களிடையே முழங்கி ஆட்சியைப் பிடித்தவர்கள் சமூக நீதியை நிலைநாட்டுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, ஒடுக்கப்பட்ட சமூகம், பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் எல்லாவிதமான உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழக மக்கள் யாவரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வோடு மனிதநேயம் பேணப்பட்டு எல்லோரும் அமைதியான முறையில் வாழ்வதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் புதிய அரசு மேற்கொள்ளும் என எதிர்பார்ப்போம்!◉



அல்ஹாஃபில் இன்திகாப் உமரீ
இலங்கை

# உழ்ஹிய்யாப் பிராணிகளை எப்போது பலியிட வேண்டும்..?

உழ்ஹிய்யாப் பிராணிகளை எப்போது வரை அறுத்துப் பலியிடலாம் என்ற விடயத்தில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடுகள் நிலவிவருவது குறிப்பிடத்தக்கது. இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் ஈதுல் அழ்ஹா தினத்திலும் அதைத் தொடர்ந்து வரும் இரண்டு நாட்களிலும் அறுத்துப் பலியிட வேண்டும் என்கின்றார். இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் துல் ஹஜ் பிறை 10,11,12,13 ஆகிய தினங்களில் அறுத்துப்பலியிட வேண்டும் என்று கூறியுள்ளார்கள். இமாம் இப்னு ஸிரீன் (ரஹ்) அவர்கள் யவ்முன் நஹ்ர் (எனும் பத்தாம் நாள்) உழ்ஹிய்யாப் பிராணியைப் பலியிட வேண்டும் என்கின்றார். மற்றும் சிலர் துல் ஹஜ் பிறை 10 முதல் இறுதிவரை உழ்ஹிய்யா வழங்கலாம் என்று கூறுகின்றார்கள். இது அல்லாத வேறுகருத்துக்களும் இருக்கின்றன. இவற்றில் அல் குர்ஆன் சுன்னாவுக்கு மிக நெருக்கமான கருத்து எது என்பதை ஆதாரங்கள் அடிப்படையில் நாம் அலசுவோம்.

இந்தக் கட்டுரையில் உழ்ஹிய்யாப் பிராணிகளை எப்போது பலியிடுவது ஏற்றமானது? என்ற தகவலையும் உழ்ஹிய்யாப் பிராணிகளை எப்போது வரை நாம் அறுத்துப் பலியிடலாம்? என்ற கருத்தையும் ஆதாரங்கள் அடிப்படையில் விரிவாகப் பார்க்கலாம்.

எந்த ஒரு அமலை நாம் நிறைவேற்றும் போதும் அந்த அமலை எப்போது, எப்படிச் செய்வது என்ற அறிவு எங்களிடம் இருப்பது அவசியமாகும். அந்த அறிவு இல்லாமல் நாம் ஒரு அமலை நிறைவேற்றும் போது பல நன்மைகளைத் தவற விட்டுவிடுவோம். சில வேலை முழு நன்மைகளையும் தவற விடும் நிலைகள் கூட ஏற்பட்டு விடலாம்.

அதனால் ஒரு அமலை நாம் செய்ய முன் அந்த அமல் குறித்து சொல்லப்பட்டுள்ள முழு தகவல்களையும் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். பின்னர் அந்த அமலை அதற்குரிய முறையில் செய்து அந்த அமலின் சிறப்புக்களையும், கூலிகளையும் முழுமையாக

அடைந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

**உதாரணமாக:**

ஜும்ஆவுக்கு செல்வது ஒவ்வொரு ஆண்கள் மீதும் கட்டாயக் கடமை. அதே நேரம் நேர காலத்துடன் செல்வது மேலதிக சிறப்புக்களைப் பெற்றுத்தரும் காரியம் என்பதைப் போல், உழ்ஹிய்யா வழங்குவது வலியுறுத்தப்பட்ட சுன்னாவாகும். அதனை அதற்கு மிகப் பொறுத்தமான நாளில் வழங்குவது பல மடங்கு நன்மைகளை எமக்குப் பெற்றுத்தரும் காரியமாகும். இன்று முன்னைய காலங்களை விட அதிகமானவர்கள் உழ்ஹிய்யா என்ற இந்த அமலை நிறைவேற்றுகின்றனர்.

ஆனால் பலரும் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் உழ்ஹியாவை நிறைவேற்றுவதில் பொடுபோக்காக செயல்படுகின்றனர். காரணம் துல் ஹஜ் பிறை பத்து நாள்களுக்குள் செய்யப்படும் அமல்களுக்கு உரிய சிறப்பான கூலியை அறியாதமையாகும்.

**1) துல்ஹஜ் முதல் பத்து நாட்களின் சிறப்பு.**

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவித்தார்.

'(துல்ஹஜ் பத்து) நாட்களில் செய்யும் எந்த நல்லறத்தையும் விட அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான நல்லமல் கிடையாது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். 'அதற்கு ஜிஹாதை விடவுமா?' என்று நபித் தோழர்கள் கேட்டனர். 'தன் உயிரையும், பொருளையும் பணயம் வைத்துப் புறப்பட்டு இரண்டையும் (இறைவழியில்) இழந்துவிட்டவன் செய்த ஜிஹாதைத் தவிர' என்று நபி(ஸல்) கூறினார்கள். (திர்மிதீ: 757)

துல்ஹஜ் முதல் பத்து நாட்களில் செய்யப்படும் அமல்கள் அல்லாஹ்விடத்தில் தனது உயிரையும், உடைமைகளையும் இழக்காமல் ஒருவர் செய்த ஜிஹாதை விட மிக விருப்பத்துக்குரியது. எனவே துல்ஹஜ் பிறை பத்தில் நாம் உழ்ஹிய்யா வழங்கினால் தான் ஜிஹாதை விட அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான அமலை செய்த கூலி எங்களின் உழ்ஹிய்யா என்ற அமலுக்குக் கிடைக்கும்.

**துல்ஹஜ் பிறை பத்தில் நாம் உழ்ஹிய்யா வழங்கினால் தான் ஜிஹாதை விட அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான அமலை செய்த கூலி எங்களின் உழ்ஹிய்யா என்ற அமலுக்குக் கிடைக்கும்.**

இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களும் மகத்தான நாட்களாகும் என சிலாகித்துக் கூறப்பட்டிருப்பதன் காரணம் என்னவெனில், அந்த நாட்களில் தான் பிரதான வணக்க வழிபாடுகள் யாவும் ஒருங்கே அமைந்திருப்பதாகும். அவையாவன தொழுகை, நோன்பு, ஹஜ், தர்மம், ஆகிய யாவும் இந்த நாட்களில் முக்கிய அமல்களாக நிறைவேற்றப்படுகின்றன. இந்த நிலை வேறு எந்த நாட்களிலும் சாத்தியப்பட மாட்டாது.

**2) நபி (ஸல்) அவர்கள் தனது உழ்ஹிய்யாப் பிராணிகளை எப்போது அறுத்தார்கள்?**

**ஆதாரம்: 01**

நாம் முதலில் தொழுகையை ஆரம்பிப்போம். அதன் பின் (இல்லம்) திரும்பி அறுத்துப் பலியிடுவோம். யார் இவ்வாறு செய்கிறாரோ அவர் நமது வழிமுறையைப் பேணியவராவார் என்று நபி (ஸல்) அவர்கள் சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள். அறிவிப்பவர் பராஃ (ரலி)

நூல் : புகாரி (951)

**ஆதாரம்: 02**

ஒரு (ஹஜ்ஜுப் பெருநாளின்) போது (தொழுகை முடிந்த பிறகு) நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் பிராணிகளை அறுத்துக் குர்பானி கொடுத்தோம். (அன்று) சிலர் தங்களுடைய பிராணியை தொழுகைக்கு முன்பாகவே அறுத்து விட்டனர். (தொழுகையிலிருந்து திரும்பிய) நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்கு முன்னதாகவே அவர்கள் குர்பானி கொடுத்து விட்டிருப்பதைக் கண்ட போது யார் தொழுகைக்கு முன் அறுத்து விட்டாரோ அவர் அதற்கு பதிலாக வேறொன்றை அறுக்கட்டும். யார் தொழும்வரை அறுத்திருக்கவில்லையோ அவர் அல்லாஹ் பெயர் சொல்லி அறுக்கட்டும் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஜுன்துப் பின் சுஃப்யான் (ரலி), நூல் : புகாரி (5500)

**ஆதாரம்: 03**

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள், "இறைத்தூதர் (ஸல்) அவர்கள் (பெருநாள்) தொழும் திடலிலேயே குர்பானிப் பிராணிகளை அறுப்பவர்களாக இருந்தார்கள். ஸஹீஹ் புகாரி 5552

**ஆதாரம் : 04**

இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்கள், "நபி(ஸல்) அவர்கள் மினாவில் இருந்தபோது துல்ஹஜ் 10ஆம் நாள் பல கேள்விகள் கேட்கப்பட்டதற்கு 'குற்றமில்லை!' என்றே பதில் கூறினார்கள். ஒருவர் 'நான் பலியிடுவதற்கு முன் தலையை மழித்து விட்டேன்!' என்று கூறியபோது, நபி(ஸல்) அவர்கள் 'குற்றமில்லை! (இப்போது) பலியிடுவீராக!' எனக் கூறினார்கள். பிறகு அவர் 'நான் மாலை நேரமான பின்பே கல்லெறிந்தேன்!' என்றதும் நபி(ஸல்) அவர்கள் 'குற்றமில்லை!' என்றார்கள். ஸஹீஹ் புகாரி : 1735.

**அத்தியாயம் : 25. ஹஜ்**

மேலுள்ள ஹதீஸ்கள் அனைத்தும் நபி (ஸல்) அவர்கள் துல் ஹஜ் பிறை பத்து பெருநாள் தினத்தில் மட்டுமே அறுத்துப் பலியிட்டுள்ளார்கள் என்பதற்கு சான்றாக உள்ளது. துல் ஹஜ் முதல் பத்துக்குரிய சிறப்பு வேறு எந்த நாட்களுக்கும் கிடையாது என்பதனால் நபி (ஸல்) அவர்கள் வேறு நாட்களில் உழ்ஹிய்யாப் பிராணிகளை அறுக்காது யவ்முன் நஹ்ர் பலியிடுவதை வழமையாகக் கொண்டிருக்கலாம்.

**3) யவ்முன் நஹ்ர் (அறுத்துப் பலியிடும் நாள்)**

ஈதுல் அழ்ஹா (அறுத்துப் பலியிடும் பெருநாள்) என்ற பெயர்கள் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தைத் தவிர வேறு நாட்களுக்கு குறிப்பிட்டுக் கூறப்படவில்லை.

அபூ பக்ரா (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் நஹ்ருடைய (துல்ஹஜ் 10 ஆம்) நாளில் எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது, 'இது எந்த நாள் என்பதை நீங்கள் அறிவீர்களா? எனக் கேட்டார்கள். நாங்கள் 'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிவர்!' என்றோம். அந்நாளுக்கு அவர்கள் வேறு பெயர் சூட்டுவார்களோ என்று நாங்கள் எண்ணுமளவுக்கு மௌனமாக இருந்துவிட்டு, 'இது (பலியிடுவதற்குரிய) நஹ்ருடைய நாளல்லவா? என்றனர். நாங்கள் 'ஆம்! என்றோம்.

ஸஹீஹ் புகாரி : 1740.

ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் நபி(ஸல்) அவர்கள் தொழுகைக்கு அடுத்தபடியாக செய்த அமல் உழ்ஹிய்யாப் பிராணிகளை அறுத்துப் பலியிடல் என்ற அமலைத் தான் என்பதை மேலே நான் குறிப்பிட்ட ஹதீஸ்கள் எங்களுக்குத் தெளிவாக விளக்குகின்றன. எந்த அளவுக்கு என்றால் தொழும் திடலுக்குத் தமது உழ்ஹிய்யாப் பிராணிகளை அவர்கள் கொண்டு சென்று

திடலிலே அந்த வணக்கத்தை நிறைவேற்றி உள்ளார்கள் என்பதைக் கூட இந்த ஹதீஸ்கள் விளக்குகின்றன. அது மாத்திரமின்றி தொழுகைக்கு முன் அறுத்துப் பலியிட்ட தோழரிடம் தொழுகைக்குப் பிறகு அறுக்கச் சொன்ன செய்தி,. மற்றும் மினாவில் ஹஜ்ஜுடைய அமல்களில் சிலதை மாற்றி செய்தவர்களுக்கு பதில் கூறும் போது குர்பானி கொடுக்கும் முன் தலையை மலித்த தோழரிடம் அது குற்றமில்லை இப்போது நீங்கள் பலியிடுங்கள் என்று கூறிய செய்திகள் அனைத்தை கொண்டும் துல்ஹஜ் முதல் பத்து சிறப்புக்குரியது என்பதால் நபிகளார் (ஸல்) அவர்கள் யவ்முன் நஹ்ரில் உழ்ஹிய்யா கொடுப்பதை வலியுறுத்தியுள்ளார்கள் என்பதை இலகுவாக நாம் புரிந்து கொள்ளமுடியும்.

இன்று சிலர் பெருநாள் தினத்தில் இரத்தம் ஓட்டினால் ஆடைகள் அழுக்காகிவிடும், பெருநாள் தினமே உழ்ஹிய்யா வேலையில் கழிந்து விடும், ஜாலியாக இருக்க நேரம் கிடைக்காது என்று எண்ணி அய்யாமுத் தஷ்ரீக்குடைய நாட்களில் அறுத்துப் பலியிடுவதை விரும்புகின்றார்கள். துல் ஹஜ் முதல் பத்தின் சிறப்பை ஈதுல் அழ்ஹா அன்று அறுத்துப் பலியிட்டவரே அடைந்து கொள்வார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே நாமும் அந்நாளில் எமது பலிப்பிராணிகளைப் பலியிட்டு முழுச்சிறப்புக்களையும் அடைந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

**5) அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்களில் (துல் ஹஜ் பிறை 11,12,13) அறுத்துப் பலியிட முடியுமா..?**

யவ்முன் நஹ்ரில் உழ்ஹிய்யாப் பிராணிகளை அறுத்துப்பலியிடத் தவறியவர்கள் அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்களுக்குள் உழ்ஹிய்யா வழங்க முடியும். இன்று சிலர் பிழையான வாதங்களை முன்வைத்து அய்யாமுத் தஷ்ரீக்குடைய நாட்களில் அறுத்துப் பலியிடுவதை உழ்ஹிய்யாவாக ஏற்க மறுக்கின்றார்கள்.

அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்களில் உழ்ஹிய்யா வழங்க முடியாது என்போரின் வாதங்களின் சுருக்கம் :

யவ்முன் நஹ்ர் மாத்திரம் தான் அறுத்துப் பலியிட முடியும். அய்யாமுத் தஷ்ரீகுடைய நாட்களில் அறுப்பது உழ்ஹிய்யாவின் கூலியைப் பெற்றுத்தராது. நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் வரலாற்றில் நடந்த சம்பவத்தை நினைவு கூரும் விதமே உழ்ஹிய்யா மார்க்கமாக்கப்பட்டுள்ளது. நபி இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இஸ்மாஈல் (அலை) அவர்களுக்குப் பகரமாக பலிப்பிராணியை வழங்கிய நாளும் அவர்கள் அந்தப்பலிப் பிராணியை அறுத்துப் பலியிட்ட நாளும் ஒரு நாளாகும். எனவே நான்கு நாட்களிலும் அறுப்பது இப்ராஹீம் நபியின் வழிமுறைக்கு மாற்றமான காரியம் என்பது இவர்களின் வாதமாகும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்..

இன்ஷா அல்லாஹ...

**நபி இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இஸ்மாஈல் (அலை) அவர்களுக்குப் பகரமாக பலிப்பிராணியை வழங்கிய நாளும் அவர்கள் அந்தப்பலிப் பிராணியை அறுத்துப் பலியிட்ட நாளும் ஒரு நாளாகும். எனவே நான்கு நாட்களிலும் அறுப்பது இப்ராஹீம் நபியின் வழிமுறைக்கு மாற்றமான காரியம் என்பது இவர்களின் வாதமாகும்.**

**ஆதலால், மிகப் பொறுமையுடைய (இஸ்மாயீல் என்னும்) மகனைக் கொண்டு அவருக்கு நற்செய்தி கூறினோம். (அல்குர்ஆன் 30:101)**



# உழ்ஹிய்யாவின் சட்ட திட்டங்கள்

**யாஸிர் ஃபிர்தௌஸி**

அழைப்பாளர் அல்- ஜுபைல் தஃவா நிலையம்,

சவூதி அரேபியா

எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. சாந்தியும் சமாதானமும் அவனுடைய தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் தோழர்கள், உலக முஸ்லிம்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

*உழ்ஹிய்யா* :

இஸ்லாமிய சின்னங்களில் ஒரு சின்னமாகும். அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருக்கி வைக்கும் இபாதத்துகளில் மகத்தான ஒரு இபாதத் ஆகும். வணக்க வழிபாடுகளை அல்லாஹ் அங்கீகரிக்க வேண்டுமானால் அதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு.

1.அல்லாஹ்விற்காக அந்த வணக்க வழிபாட்டை நிறைவேற்ற வேண்டும்.

2. நபி (ஸல்) அவர்களை பின்பற்றி அவ்வணக்கத்தை செய்யவேண்டும்.

உமது இரட்சகனுக்காகவே தொழுது அவனுக்காகவே அறுத்துப் பலியிடுவீராக."

(22:37)

துல்ஹஜ் மாதம் 10 ஆம் நாள் (பெருநாள் தொழுகைக்குப் பின்) அன்றும் அதற்கு அடுத்த நாட்களான 11,12,13 ஆகிய நாட்களும் இதனை நிறைவேற்றலாம். பெருநாள் தொழுகைக்கு முன்பாக இதனை நிறைவேற்றக்கூடாது.

ஆதாரம்; (புகாரி 5545)

**உழ்ஹிய்யா கொடுப்பவர்களின் கவனத்திற்கு.**

உழ்ஹிய்யா கொடுக்க நாடியவர் துல்கஃதா மாதத்தை முப்பதாக பூர்த்தி செய்த பிறகு அல்லது துல்ஹஜ் மாதம் முதல் பிறை தென்பட்டதிலிருந்து உழ்ஹிய்யா கொடுக்கும் வரை நகம், முடி இவற்றில் எதையும் வெட்டக்கூடாது. நீங்கள் உழ்ஹிய்யா கொடுப்பவராக இருந்து துல்ஹஜ் பிறையைக் கண்டால் உழ்ஹிய்யா கொடுக்கும் வரை தனது முடியை, நகத்தை வெட்ட வேண்டாம்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : உம்மு ஸலமா (ரலி)

நூல் :முஸ்லிம் , 5234

10 நாட்களுக்கு இடையில் உழ்ஹிய்யா கொடுப்பதாக ஒருவர் நிய்யத் வைத்தால் அப்போதிருந்து கொடுக்கும் வரை இவற்றை வெட்டக்கூடாது. இதற்கு முன் அவர் வெட்டி இருந்தால் அவர் மீது குற்றமில்லை.

உழ்ஹிய்யா கொடுப்பவர் ஹஜ்ஜிலே பங்கெடுப்பவராக இருந்தால் இந்த பத்து நாட்களில் முடிகளையோ, நகங்களையோ வெட்டுவது அனுமதிக்கப் பட்டது.

தனது முடியை, நகத்தை வெட்ட வேண்டாம் என்ற இந்த சட்டம் உழ்ஹிய்யா கொடுக்கும் நபருக்கு மட்டும் உரித்தானது. இச்சட்டம் அவருடைய குடும்பத்தார்களையோ, உறவினர்களையோ,

ஒருவரின் உழ்ஹிய்யாவை கொடுப்பதற்கு பொறுப்பேற்றவரையோ உள்ளடக்காது.

உழ்ஹிய்யா கொடுக்கும் ஒருவர் தனது நகத்தையோ, முடியையோ எடுத்தால் அவர் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு தேடவேண்டும். மீண்டும் அவர் இவ்வாறு செய்யக் கூடாது. இதற்கு எந்தப் பரிகாரமும் இல்லை. அவர் தனது உழ்ஹிய்யாவை நிறைவேற்றுவதில் தடையேதுமில்லை.

உழ்ஹிய்யா கொடுக்கும் ஒருவர் மறதியாலோ, நகங்களை, முடிகளை எடுக்க கூடாது என்ற சட்டத்தை தெரியாமலோ, அல்லது தானாக முடி கொட்டி விட்டாலோ அவர் மீது குற்றமில்லை. அவரும் தனது உழ்ஹிய்யா நிறைவேற்றலாம்.

கையின் நகம் உடைந்து தொங்கிக் கொண்டு வலியை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறது. அல்லது அறுவைசிகிட்ச்சை செய்வதற்காகவோ காயத்தை குணப்ப டுத்துவதற்காகவோ நகம், முடியை வெட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது போன்ற நிர்பந்த நிலையில் நகத்தை, முடியை வெட்டுவது அனுமதிக்கப் பட்டதே! இவரும் உழ்ஹிய்யாவை நிறைவேற்றலாம்.

**உழ்ஹிய்யாவின் நோக்கம் இறையச்சமே !☼**

பெருமைக்காகவோ, புகழுக்காகவோ இருக்கக் கூடாது. அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே நோக்கமாக கொள்ளவேண்டும். (எனினும்), குர்பானியின் மாமிசங்களோ, அவற்றின் உதிரங்களோ அல்லாஹ்வை ஒரு போதும் அடைவதில்லை; ஆனால் உங்களுடைய தக்வா (பயபக்தி) தான் அவனை அடையும்.

***22:37***

**யாரின் மீது கடமை**

உழ்ஹிய்யாவை நிறைவேற்றுவது வாஜிபா? வலியுறுத்தப்பட்ட சுன்னத்தா? சுன்னத்தா? என்று அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு உள்ளது.

“யாருக்கு வசதி இருந்தும் அவர் உழ்ஹிய்யா கொடுக்கவில்லையோ அவர் நம்முடைய தொழும் திடலை நெருங்க வேண்டாம்.” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம் : ஹாக்கிம் ***2/389***

இது போன்ற இன்னும் சில ஹதீஸ்களின் அடிப்படையில் பெரும்பாலான அறிஞர்கள் வலியுறுத்தப்பட்ட சுன்னத் என்றே கருதுகின்றனர். எனினும் கடன் வாங்கி கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

**உழ்ஹிய்யாவின் பிராணிகள்**

தங்களுக்குரிய பலன்களை அடைவதற்காகவும்; குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ் அவர்களுக்கு அளித்துள்ள (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) நாற்கால் பிராணிகள் மீது அவன் பெயரைச் சொல்(லி குர்பான் கொடுப்)பவர்களாகவும் (வருவார்கள்); எனவே அதிலிருந்து நீங்களும் உண்ணுங்கள்; கஷ்டப்படும் ஏழைகளுக்கும் உண்ணக் கொடுங்கள். ***22:28, 34, 36,*** உழ்ஹிய்யாவின் இறைச்சியை நாமும் உண்ணலாம், சேமித்தும் வைக்கலாம் ஏழைகளுக்கும் கொடுக்கலாம் எனினும் ஏழைகளுக்கும், யாசிப்பவர்களுக்கும் முன்னுரிமை அளிப்பதே மிகச் சிறந்தது. மூன்று பங்குகள், இரண்டு பங்குகள் வைக்க வேண்டும் என்ற எந்த நிபந்தனையும் குர்ஆனிலும் ஹதீஸிலும் இல்லை.

செம்மறியாடு: ஆறு மாதங்கள் பூர்த்தியடைந்தது. வெள்ளாடு: ஒரு வருடம் பூர்த்தியடைந்தது. மாடு: இரு வருடம் பூர்த்தியடைந்தது. ஒட்டகம்: ஐந்து வருடங்கள் பூர்த்தியடைந்தது.

ஃபதாவா அல் லஜ்னதுத் தாயிமா ***11/ 378***

**ஆடு, மாடு, ஒட்டகம் போன்றவற்றில் பெண்**

### இனத்தையும் உழ்ஹிய்யா கொடுக்கலாம்

(நபியே! அம்மக்களிடம்) "கால்நடைகளில் எட்டு வகைகள் உள்ளன செம்மறி ஆட்டில் (ஆண், பெண்) இரு வகை வெள்ளாட்டில் (ஆண், பெண்) இரு வகை அவன் (அல்லாஹ்) ஆண் இரண்டையும் ஹராமாக்கி விட்டானா? அல்லது பெட்டை இரண்டையும் ஹராமாக்கி விட்டானா? அல்லது அவ்விரு வகைகளிலுமுள்ள பெண்களின் கர்ப்பங்களில் உள்ளவற்றையா (அவன் தடுத்திருக்கிறான்?) நீங்கள் உண்மை கூறுபவர்களாக இருந்தால், (இதனை) ஆதாரத்துடன் எனக்கு அறிவியுங்கள்" என்று கேட்பீராக.

6:143,144

### கர்ப்பிணியையும் உழ்ஹிய்யா கொடுக்கலாம்

இமாம் இப்னு தைமிய்யா(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "கர்ப்பிணியாக உள்ள பிராணிகளைக் கொடுக்க முடியும், அதன் குட்டி இறந்த நிலையில் வெளியேறினால் அதை அறுக்க வேண்டியதில்லை என்பதே இமாம் 'ஷாஃபிஈ(ரஹ்), அஹ்மத்பின் ஹம்பல் (ரஹ்) போன்றவர்களின் கருத்தாகும்' அது உயிருடன் வெளியேறினால் அதையும் அறுக்கவேண்டும்.

மஜ்மூஉல்ஃபதாவா 6/178

*பாலூட்டும் பிராணியை அறுக்க கூடாது*

அறிவிப்பவர்:அபூஹுரைரா(ரலி)

முஸ்லிம் : (3799)

### பிராணிகளும் அதன் தன்மைகளும்

அறுக்கும் பிராணிகள் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். கண்கள் குருடாகவோ, காதுகள் வெட்டப் பட்டதாகவோ, துவாரமிடப்பட்டதாகவோ, நோயுள்ளதாகவோ, நொண்டியாகவோ, மெலிந்ததாகவோ, கொம்புகள் உடைந்ததாகவோ இருக்க கூடாது.

அறிவிப்பாளர்கள்: அல்பரா பின் ஆசிப்(ரழி) அலி (ரழி)

நூற்கள்: அஹ்மத்1/149 , திர்மிதி1504, நாஸாயி4462, அபூதாவூத்2803, இப்னுமாஜா3143

### அறுக்கும் முறை

அறுப்பதற்கு முன் பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று கூற வேண்டும். தக்பீர் கூறியும் அறுக்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்களும் உழ்ஹிய்யா கொடுத்தார்கள். அவர்கள் பின்வரும் பிரார்த்தனையைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை. பிறகு அந்தக் கத்தியை வாங்கி செம்மறியாட்டைப் பிடித்து சரித்துப் படுக்கவைத்து அறுத்தார்கள். (அறுப்பதற்கு முன்) பிஸ்மில்லாஹ் அல்லாஹும்ம தகப்பல் மின் முஹம்மதின் வஆலி முஹம்மதின் வமின் உம்மதி முஹம்மதின் (அல்லாஹ்வின் பெயரால், இறைவா! முஹம்மதிடமிருந்தும் முஹம்மதின் குடும்பத்தாரிடமிருந்தும் முஹம்மதின் சமுதாயத்தாரிடமிருந்தும் ஏற்றுக்கொள்வாயாக) என்று கூறி அதை அறுத்தார்கள்.

அறிவிப்பவர் ஆயிஷா(ரழி)

நூல்:முஸ்லிம் 5203, அபூதாவூத் 2794

இந்த அடிப்படையில் ஒருவர் தனித்து உழ்ஹிய்யா கொடுப்பதாக இருந்தால் اَللّٰهُمَّ تَقَبَّلْ مِنِّي அல்லாஹும்ம தகப்பல் மின்னீ இறைவா என்னிடமிருந்து ஏற்றுக் கொள்வாயாக! தனது குடும்பத்தாருக்கும் சேர்த்து கொடுப்பதாக இருந்தால் اَللّٰهُمَّ تَقَبَّلْ مِنِّي وَمِنْ أَهْلِي அல்லாஹும்ம தகப்பல் மின்னீ வமின் அஹ்லீ என்னிட மிருந்தும் எனது குடும்பத்தாரிடமிருந்தும் ஏற்றுக் கொள்வாயாக! என்று பிரார்த்தனை செய்யலாம். கிப்லாவை முன்னோக்கி அறுப்பது விரும்பத்தக்கது, கிப்லாவை முன்னோக்காமலும் அறுக்கலாம்

கூர்மையான கத்தியினால் அறுக்க

வேண்டும், அறுக்கப்படும் பிராணியை விட்டும் கத்தியை மறைக்க வேண்டும், விரைவாக அறுக்க வேண்டும். அறுக்கப்பட்ட பிராணியின் உயிர் முழுமையாகப் பிரியும் வரை விட வேண்டும், யார் உழ்ஹிய்யாவை நிறைவேற்றுகின்றார்களோ அவர்களே நேரடியாக அறுப்பது சிறந்தது. எனினும் அறுக்கும் முறையை நன்கு அறிந்தவர்கள் அறுப்பதே மிகச்சிறந்தது.

ஆதாரங்கள்: புகாரி, முஸ்லிம், திர்மிதி

நபி(ஸல்) அவர்கள் கறுப்பும் வெள்ளையும் கலந்த இரு ஆடுகளைக் குர்பானி கொடுத்தார்கள். அப்போது அவர்கள் தம்முடைய பாதத்தை அவற்றின் கழுத்தில் வைப்பதை நான் பார்த்தேன். பிஸ்மில்லாஹ்வையும் தக்பீரையும் கூறி அவற்றை தம் கையால் அறுத்தார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ்(ரலி) நூல்:புகாரி

ஒட்டகத்தை நிற்க வைத்து அதன் ஒரு காலை கயிற்றால் கட்டி வைத்துக் கொண்டு அறுக்க வேண்டும். அறிவிப்பாளர்: இப்னு உமர் ஆதாரம்:புகாரி

பிராணியை அறுக்கும் முன் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்றோ குளிப்பாட்ட வேண்டுமென்றோ எவ்வித ஆதாரங்களும் இல்லை.

பிராணியை அறுக்கும் முன் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்றோ குளிப்பாட்ட வேண்டுமென்றோ எவ்வித ஆதாரங்களும் இல்லை.

**பெண்களும் அறுக்கலாம்**

ஒரு பெண்மணி (கூர்மையான) கல்லால் ஆட்டை அறுத்து விட்டார். இது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது அதை சாப்பிடும்படி கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பவர் : கஅபு இப்னு மாலிக்(ரலி), நூல் :புகாரி 2304

**உழ்ஹிய்யா நிறைவேற்றப்படும் இடம்**

தொழும் திடலில் நபி (ஸல்) அவர்கள் அறுப்பவர்களாக இருந்தார்கள்.”

அறிவிப்பவர் : இப்னு உமர்(ரலி)

நூல் :புகாரி

இன்றைய நாளில் நாம் முதலாவது செய்வது தொழுகையாகும். பிறகு நாம் (இல்லத்திற்கு) திரும்பிச் சென்று உழ்ஹிய்யா கொடுப்போம்.

அறிவிப்பவர் : பராஇப்னு ஆஸிப் (ரலி)

நூல்:புகாரி

இந்த ஹதீஸின் அடிப்படையில் தொழுகை நடை பெற்ற திடலிலும், வீட்டிலும் உழ்ஹிய்யா கொடுக்கலாம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

**உழ்ஹிய்யா பிராணியை பயன்படுத்தலாம்**

உழ்ஹிய்யா பிராணியை பால் கறப்பதற்காகவோ, விவசாய நிலத்தை உழுவதற்காகவோ பயணம் செய்வதற்காகவோ பயன் படுத்தலாம் என்பதற்கு மார்க்கத்தில் எந்த தடையும் இல்லை. அனுமதிக்கும் வகையிலான ஆதாரங்களே உள்ளன. அறுக்கப் போகும் பிராணிதானே எனக் கருதி உணவு கொடுக்காமல் இருப்பதோ, அதிக நோவினை செய்வதோ கூடாது.

ஒருவர் தமது குர்பானி ஒட்டகத்தை இழுத்துக் கொண்டு செல்வதைப் பார்த்த நபி(ஸல்) அவர்கள் அதில் ஏறிக் கொள்ளும் என்றார்கள். அதற்கவர் இது குர்பானி ஒட்டகமாயிற்றே என்றதும் அதில் ஏறிக் கொள்ளும் என்றார்கள். மீண்டும் அவர் இது குர்பானி ஒட்டகமாயிற்றே என்றதும் அதில்

ஏறிக்கொள்ளும் என மூன்றாம் தடவையும் கூறினார்கள். அறிவிப்பவர் : அனஸ் (ரலி) நூல் : புகாரி

**மரணித்தவர்களுக்காக உழ்ஹிய்யா கொடுப்பதில் சில நிபந்தனைகள்**

ஒரு மனிதன் தனக்காகவும் தன் குடும்பத்தார்கள் சார்பாகவும் உழ்ஹிய்யா கொடுக்கலாம் இதில் உயிரோடு இருப்பவர்களும் மரணித்தவர்களும் அடங்குவார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தங்களின் சார்பாகவும், தங்கள் குடும்பத்தார்கள் சார்பாகவும் உழ்ஹிய்யா கொடுத்துள்ளார்கள்.

ஆதாரம்: முஸ்லிம்: **5203**

ஆனால் இன்னார் சார்பாக என்று மரணித்தவர்களுக்கு குறிப்பாக்கி கொடுத்ததாக எந்த ஆதாரமும் இல்லை.

**வஸியத் நிறைவேற்றப்பட வேண்டும்**

தன்னுடைய மரணத்திற்குப் பின் தனது செல்வத்திலிருந்து உழ்ஹிய்யா கொடுக்க வேண்டும் என்று வஸியத் செய்திருந்தால் அதனை நிறைவேற்ற வேண்டும்.

**தன்னுடைய மரணத்திற்குப் பின் தனது செல்வத்திலிருந்து உழ்ஹிய்யா கொடுக்க வேண்டும் என்று வஸியத் செய்திருந்தால் அதனை நிறைவேற்ற வேண்டும்.**

வஸிய்யத்தை (மரண சாஸனத்தை)க் கேட்ட பின்னர், எவரேனும் ஒருவர் அதை மாற்றினால், நிச்சயமாக அதன் பாவமெல்லாம் யார் அதை மாற்றுகிறார்களோ அவர்கள் மீதே சாரும் நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) கேட்பவனாகவும், அறிபவனாகவும் இருக்கின்றான். 2:181

ஸதக்கத்ததுல் ஜாரியா என்ற அடிப்படையில் உயிரோடு இருப்பவர்கள் மரணித்தவர்களுக்காக உழ்ஹிய்யா கொடுக்கலாம் என்று ஹனபி மத்ஹபை சார்ந்த சில அறிஞர்கள் கருதுகிறார்கள். என்றாலும் நபி(ஸல்) சுன்னாவிலிருந்து இதற்கு எந்த ஆதாரமும் இல்லை. நபி(ஸல்) அவர்கள் நெருங்கிய உறவினரான ஹம்ஸா(ரழி) அவர்களுக்கோ, நபி(ஸல்) வாழ்நாளில் மரணித்து விட்ட திருமணம் முடித்த மூன்று பெண்குழந்தைகளுக்கோ, சிறு வயதில் மரணித்து விட்ட மூன்று ஆண் குழந்தைகளுக்கோ, மனைவிமார்களில் தனக்கு மிகவும் விருப்பமான கதீஜா (ரழி) அவர்களுக்கோ உழ்ஹிய்யா கொடுத்ததாக எந்த ஆதாரமும் இல்லை. ஸஹாபாக்களின் காலத்திலும் எந்த ஒரு ஸஹாபியும் மரணித்து விட்ட ஸஹாபிக்காக உழ்ஹிய்யா கொடுக்க வில்லை.

**மாற்றுமதத்தவர்களுக்கு உழ்ஹிய்யா இறைச்சியை வழங்கலாமா?**

தங்களுக்குரிய பலன்களை அடைவதற்காகவும்; குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ் அவர்களுக்கு அளித்துள்ள (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) நாற்கால் பிராணிகள் மீது அவன் பெயரைச் சொல்(லி குர்பான் கொடுப்)பவர்களாகவும் (வருவார்கள்); எனவே அதிலிருந்து நீங்களும் உண்ணுங்கள்; கஷ்டப்படும் ஏழைகளுக்கும் உண்ணக் கொடுங்கள்.

(அல்குர்ஆன் 22:28)

இந்த வசனத்தில் முஸ்லிம் ஏழைகள் காஃபிர் ஏழைகள் என்று பிரிக்கவில்லை ஏழைகளுக்கும் உண்ணக் கொடுங்கள் என்று பொதுவாக சொல்லப் பட்டுள்ளது. இதன் மூலம் இஸ்லாத்தின் பக்கம் அவர்களுக்கு ஈர்ப்பு ஏற்படலாம். அவர்களை இஸ்லாத்தை ஏற்க அழைப்பு விடுக்கலாம். மேலும் முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும்

எதிர்ப்பவர்களாக இருந்தால் அவர்களுக்கு வழங்கக்கூடாது.

மார்க்க (விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான்.

(அல்குர்ஆன் **60: 8, 9** )

ஃபதாவா அல் லஜ்னதுத் தாயிமா **10/437,438**

**கூட்டாக நிறைவேற்றுவது**

ஹுதைபியா ஆண்டில் நபி (ஸல்) அவர்களோடு மாட்டில் ஏழு பேர் வீதமும் ஒட்டகத்தில் ஏழு பேர் வீதமும் அறுத்துப் பலியிட்டோம்.

அறிவிப்பாளர் : ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் நூல் :முஸ்லிம் **:1318**

ஆட்டில் கூட்டு சேர்வதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

**உழ்ஹிய்யா தோல்**

உழ்ஹிய்யா பிராணியின் தோல் அல்லது இறைச்சியை உரித்தவருக்குக் கூலியாகக் கொடுக்கக் கூடாது. இதை தர்மமாக ஏழைகளுக்கோ, அநாதை நிலையங்களுக்கோ மதரஸாக்களுக்கோ வழங்கலாம்.

ஒரு ஒட்டகத்தைக் குர்பானி கொடுக்கும் பொறுப்பை என்னிடம் நபி (ஸல்) அவர்கள் ஒப்படைத்தார்கள். அதன் மாமிசத்தையும், தோலையும் அதன் மீது கிடந்த(கயிறு, சேனம் போன்ற)வைகளையும் தர்மமாக வழங்குமாறும் உரிப்பவருக்குக் கூலியாக அதில் எதனையும் வழங்கக் கூடாது என்றும் எனக்குக் கட்டளையிட்டார்கள். அதற்கான கூலியை நாங்கள் தனியாகக் கொடுப்போம்.

அறிவிப்பவர் : அலீ(ரலி), நூல்: புகாரி

**அல்லாஹ்விற்காக மட்டும்!**

அறுத்துப் பலியிடுதல் என்ற இந்தச் செயல் மகத்தான ஒரு இபாதத் ஆகும். அத்துடன் நம்மை இறைவனின் பக்கம் நெருக்கி வைக்கும். மரணித்துவிட்ட நபிமார்களுக்காகவோ, வலிமார்களுக்காகவோ, மஹான்களுக்காகவோ அவ்லியாக்களுக்காகவோ, ஜின்களுக்காகவோ அறுத்துப்பலியிடுதல் மாபெரும் இணைவைப்பாகும்.

நபியே நீர் கூறும்: “மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும்.

“அவனுக்கே யாதோர் இணையுமில்லை இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன் (அவனுக்கு) வழிப்பட்டவர்களில் முஸ்லிம்களில் நான் முதன்மையானவன் (என்றும் கூறும்). **6:162,163**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

அல்லாஹ் அல்லாத மற்றவர் பெயரில் (பிராணியை) அறுத்தவனை அல்லாஹ் சபிக்கிறான்.

அறிவிப்பவர் : அபுத்துஃபைல் (ரலி)

நூல் : முஸ்லிம் **5240**

அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தந்த அடிப்படையில் இவ்வணக்க வழிபாட்டை நிறைவேற்றி மறுமையில் வெற்றி பெற அல்லாஹ் உதவி செய்வானாக!

**இக்கட்டுரையை தொகுக்க உதவிய நூல்கள்**
**அல்- ஜாமிஃ லிஅஹ்காமில் உழ்ஹிய்யா**
**ஷைக் : நதா அபூ அஹ்மத் ,**
**அஹ்காமுல் உழ்ஹிய்யா**
**முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமின் (ரஹ்)**




# துல் ஹஜ் முதல் பத்து நாட்கள்

— அபூஅக்மல்

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா தனது அருளால் வருடத்தில் சில குறிப்பிட்ட நாட்களை சிறப்புக்குரியவையாக ஆக்கி வைத்துள்ளான். அந்நாட்களில் அடியார்கள் அதிகப்படியான நற்செயல்கள் செய்து மறுமையில் கூடுதல் நன்மைகள் பெற வாய்ப்பை தந்திருக்கிறான்.

அத்தகைய தனிச் சிறப்புக்குரிய நாட்களில் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் குறிப்பிடத்தக்கவை. அல்லாஹு தஆலா திருக்குர்ஆனில் "அதிகாலை மீது சத்தியமாக பத்து இரவுகள் மீதும் சத்தியமாக" (89: 12) என்று கூறுகிறான். இங்கு பத்து இரவுகள் என்று சொல்லப்படுவது துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் குறித்துத்தான் என்று மிகப்பெரும்பாலான திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர். இதுதான் சரியானது என்று இமாம் இப்னு கஸீர் அவர்கள் தமது திருக்குர்ஆன் விரிவுரையில் குறிப்பிடுகிறார்கள்.

ஹதீஸ்: எந்த நாட்களில் செய்யும் நற்செயல்களையும் விட இந்த (துல்ஹஜ்) பத்து நாட்களில் செய்யும் நற்செயல்களே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள், ஜிஹாதை விடவுமா? என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள், ஜிஹாதை விடவும்தான். ஆனாலும் தன் உயிருடனும் செல்வத்துடனும் புறப்பட்டுச் சென்று இரண்டுடனும் திரும்பி வராதவரின் ஜிஹாத் (இவையனைத்தையும் விட) அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானதாகும் என பதிலளித்தார்கள்.

(திர்மிதி 688, மற்றும் அபுதாவூத், இப்னு மாஜா).

ஒரு நற்செயலை பிற காலங்களில் செய்வதை விட இந்த பத்து நாட்களில் செய்யும்போது அல்லாஹ்வுக்கு அதிக விருப்பத்துக்குரியதாக ஆகிறது. அல்லாஹ்வுக்கு அதிக விருப்பத்துக்குரியது எனும்போது அதிக நற்கூலிக்குரியதாகவும் இருக்கும்.

நற்செயல்களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும் எனும்போது நாம் நஃபிலான (கடமையல்லாத உபரியான) தொழுகைகளை அதிகமாக தொழ வேண்டும். தர்மங்கள் அதிகமாக வழங்க வேண்டும். உபரியான நோன்புகள் நோற்க வேண்டும். அதிகமாக

இறைவேதம் ஓதுதல், திக்ர் தஸ்பீஹ் உள்ளிட்டவற்றில் ஈடுபடுதலும் வேண்டும்.

முக்கியமாக துல் ஹஜ் ஒன்பதாவது நாள் நோன்பு நோற்பது சுன்னத்தாகும். இந்த நாள் அரஃபா நாளாகும். இந்த நாளில் ஹாஜிகள் அரஃபா பெருவெளியில் ஒன்று கூடுகிறார்கள். இந்நாளில் ஹஜ்ஜுக்கு செல்லாதவர்கள் நோன்பு நோற்க வேண்டும். (ஹாஜிகளுக்கு இந்த நோன்பு சுன்னத் அல்ல.) இந்த நோன்பு குறித்து நபியவர்கள், " அதற்கு முந்தைய ஓராண்டிற்கும் அதற்குப் பிந்தைய ஓராண்டிற்கும் பாவப் பரிகாரமாக அல்லாஹ் ஆக்குவான் என்று நான் எதிர்பார்க்கிறேன்" என்று கூறினார்கள். (முஸ்லிம் 2151).

"எந்த நாளையும் விட மிக அதிகமாக அரஃபா நாளில் அல்லாஹ் அடியார்களை நரகத்திலிருந்து விடுதலை செய்கிறான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

மேலும், துஆவில் சிறந்தது அரஃபா நாளில் செய்யும் துஆ என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. (திர்மிதி)

எல்லாம் வல்ல அல்லாஹ் நாம் அதிக நன்மைகள் சம்பாதிக்க நமக்கு வழங்கியுள்ள நல்வாய்ப்பான இந்த சிறப்புக்குரிய நாட்களை பயன்படுத்திக் கொண்டு அவனருளை நிறைவாகப் பெறுவோமாக.

அவர் (இப்ராஹீம்(அலை)) (தன் மகனை நோக்கி) "என் அருமை மைந்தனே! நான் உன்னை (என்னுடைய கைகொண்டு) அறுத்துப் பலியிடுவதாக மெய்யாகவே நான் என்னுடைய கனவில் கண்டேன். (இதைப் பற்றி) நீ என்ன அபிப்பிராயப்படுகிறாய்?" என்று கேட்டார். அதற்கவர், "என்(னருமைத்) தந்தையே! உங்களுக்கு இடப்பட்ட கட்டளைப்படியே நீங்கள் செய்யுங்கள். அல்லாஹ் அருள் புரிந்தால் (அதனைச் சகித்துக்கொண்டு) உறுதியாயிருப் வனாகவே நீங்கள் என்னைக் காண்பீர்கள்" என்று கூறினார்.
(அல்குர்ஆன் 30:102)






# இதுதான் ஆர்.எஸ்.எஸ்

**பன்வர் மெக்வன்ஷி, ஆர்.எஸ்.எஸ்-இல் பதினாறு ஆண்டுகள் செயலாற்றி, அந்த அமைப்பிற்குள் அவர் மீது எழுந்த சாதீய அவமதிப்பின் காரணமாக மனம் வெதும்பி ஆர்.எஸ்.எஸ் அமைப்பை விட்டு வெளியேறியவர். அவர் அந்த அமைப்பின் பயங்கரவாத நடவடிக்கைகளைப் பற்றியும், சதித் திட்டங்களைப் பற்றியும் புள்ளி விபரங்களோடு விளக்கி எழுதியிருக்கும் நூல்தான் 'இந்துவாக நான் இருக்க முடியாது - ஆர்.எஸ்.எஸ்-ல் ஒரு தலித்தின் கதை' எனும் நூல். இந்த இயக்கம் பற்றி அவர் எழுதியிருப்பது நமக்கு திகிலூட்டுவதாக உள்ளது.**

குறிப்பாக, ஆர்.எஸ்.எஸ் இந்தியாவை 11 மண்டலங்களாகவும், 41 மாவட்டங்களாகவும் பிரித்து கிட்டத்தட்ட ஒரு இணை அரசாங்கம் போல் செயல்படுகிறது என்று குறிப்பிடுகிறார் பன்வர் மெக்வன்ஷி. அதேபோல் ஒவ்வொரு மாவட்டமும் இரண்டு அல்லது மூன்று சங் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நகரத்திற்கும் மற்றும் மாவட்டத்திற்கும் ஒரு ஷாகா பயிற்சியாளர், விஸ்ட்டாரக், வட்டார பிரசாரக், மாவட்ட பிரசாரக் மற்றும் நன்கொடைகள் மூலம் பெறப்படும் நிதியை பராமரிக்கும் வணிகக்கும்பல் (பனியாத் தலைவர்) என்று கிட்டத்தட்ட ஒரு இராணுவம் போல் செயலாற்றுவதை மிக நேர்த்தியாக பதிவு செய்திருக்கிறார்.

அதாவது, ஒருவர் ஆர்.எஸ்.எஸ்-இல் சேர்ந்தவுடன் சுயம்சேவக் ஆகி பின்னர், படிப்படியாக கடநாயக் - ஞான நாயக் - முதன்மை ஆசிரியர் - ஷாகா மேலாளர் - கார்யவாஹ் - மண்டல அலுவலர் என்று பதவி உயர்வு பெறுகிறார்கள். இந்த மண்டல அலுவலர்கள் தான் சர்சங்க்ஸ்லாக் என்ற மிக மேல்நிலைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அவரே நாக்பூரில் உள்ள ஆர்.எஸ்.எஸ் தலைமை இடமான ஹெட்கேவர் பவனின் தலைமை இயக்குனர் ஆவார்.

இந்த சர்சங்க்லாக் பதவி என்பது "வாழ்நாள் பதவி" ஆகும். பொதுவாக இந்தப் பதவிக்கு மராட்டிய சித்பவன் பிராமணர்களே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 1925-ம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். துவக்கப்பட்டது முதல் இதுவரை சர்சங்க்லாக் பதவியில் இருந்தவர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது;

1. கேசவ் பலிராம் ஹெட்கேவர் - கி.பி. 1925-1930.
2. லட்சுமண் வாசுதேவ் பரஞ்சபே - கி.பி. 1930-1931 (தற்காலிகமாக ).
3. கேசவ் பலிராம் ஹெட்கேவர் - கி.பி. 1931-1940.
4. குருஜி எம்.எஸ். கோல்வாக்கர்- கி.பி. 1940-1973.
5. மதுக்கர் தத்தாத்ரேயா தேவரஸ் - கி.பி. 1973-1994.
6. ராஜு பைய்யா ராஜேந்திரசிங்- கி.பி. 1994-2000 (இவர் மட்டுமே சத்திரியர் வகுப்பைச் சேர்ந்தவர்).
7. கே.எஸ். சுதர்சன்- கி.பி. 2000-2009.
8. மோகன் பகவத்- 21/03/2009 ந்தேதி முதல்.

தற்போதைய ஆர்.எஸ்.எஸ்-இன் தலைமை இயக்குனராக மோகன் பகவத் அவர்கள் 21/03/2009 ந்தேதி முதல் இருக்கிறார்.

ஆர்.எஸ்.எஸ். தமது அமைப்பில் கும்ஹார், ஜாட், குஜ்ஜார், மாலி போன்ற உயர்சாதி இந்துக்களையும், பங்கார்கள், கோலிகள் போன்ற தலித்துகளையும், பில் - ஆதிவாசிகளையும் சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால், உயர்சாதி இந்துக்களுக்குத்தான் முதன்மை செயல்பாட்டாளர்கள் பதவி கிடைக்கும் என்றும் தலித்துகள், ஆதிவாசிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ் பதவிகளுக்கு தேர்வு செய்யப்படமாட்டார்கள் என்று குறிப்பிடுகிறார் பன்வர் மெக்வன்ஷி.

ஆர்.எஸ்.எஸ்-இன் அரசியல் பிரிவான பா.ஜ.க-வில் ஒரு தலித்தான ராம்நாத் கோவிந்த் ஜனாதிபதி ஆகலாம். ஆனால் ஆர்.எஸ்.எஸ்-இல் அவர் ஒரு மாவட்ட அல்லது மண்டல பிரசாராக் போன்ற பதவிக்கு வர முடியாது என்று தெளிவாக குறிப்பிடுகிறார்.

ஆர்.எஸ்.எஸ் கட்டமைப்பு மனுநீதி வழிகாட்டியபடி தான் அமைக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய குறிக்கோள்களாக இருப்பவைகள் என்னவென்றால்;

- இந்து - இந்தியா - இந்துஸ்த்தான்.
- இந்துயிசத்தை இராணுவமயமாக்குவதும், இராணுவத்தை இந்து மயமாக்குவதும்.
- கிறித்துவ மற்றும் இஸ்லாமியர்களை நாட்டை விட்டு வெளியேற்றுதல் அல்லது அழித்தொழித்தல்.

இவற்றை அடித்தளமாகக் கொண்டே ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்களுக்கு ஷாகா பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுருக்கமாக, அவர்களுக்கு இந்துத்துவத்தையும், தேசபக்தியையும் புகட்டி பிற மதத்தினரை எதிரிகளாக நினைக்க பயிற்றுவிக்கிறது. இவ்வாறான ஒரு சுயம்சேவக் போன்றுதான் பன்வர் மெக்வன்ஷியும் இருந்தார். இவர் 1990-ஆம் ஆண்டு நடந்த முதல் கரசேவையில் கலந்து கொள்ள இவரது உடன்பிறந்த சகோதரர் பத்ரிலாலும் அயோத்தி நோக்கிச் செல்லும்போது அப்போதைய உ.பி முதல்வர் முலாயம்சிங் யாதவ்-ன் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டு மதுராவில் சிறைவைக்கப்பட்டு பிறகு விடுவிக்கப்படுகிறார். தோல்வியுடன் சிர்தியாஸ் திரும்பிய பன்வர் மெக்வன்ஷி பின்னர் ஆர்.எஸ்.எஸ் செயல்பாடுகளில் முன்னிலும் வேகமாக இயங்கி ஆர்.எஸ்.எஸ்-இன் மாவட்ட கார்யவாஹ் பதவி வரை முன்னேறுகிறார்.

இந்த சூழலில், தமது பட்டப்படிற்காக இவரது சிர்தியாஸ் கிராமத்திற்கு அருகில் உள்ள பில்வாரா கிராமத்திற்கு செல்கிறார். அங்கே, இவர் ஒரு தலித் என்பதால் தங்குவதற்கு இடம் கிடைக்கவில்லை. ஆர்.எஸ்.எஸ் அமைப்பை சேர்ந்தவர்களும் அவருக்கு இடம் கொடுக்கவில்லை. அதனால், பில்வாராவில் உள்ள அம்பேத்கர் விடுதியில் தங்கும் நிலை ஏற்படுகிறது. அதுவரை சாவர்க்கர், மூஞ்சே, திலகர், கோகலே, ஹெக்டேவர் மற்றும் குருஜி கோல்வாக்கர் போன்ற இந்துத்துவா தலைவர்களை மட்டுமே தெரிந்திருந்த பன்வர் மெக்வன்ஷிக்கு பூலே, கபீர், புத்தர் மற்றும் அம்பேத்கர் போன்றவர்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அங்கே கிடைத்தது.

அதேபோல் அதுவரை ஆர்.எஸ்.எஸ். பத்திரிக்கையான “பாஞ்சஜன்யா”-வை மட்டுமே படித்து வந்த அவருக்கு, ஓஷோ ரஜனீஷ் வெளியிட்ட “ஓஷோ டைம்ஸ்” செய்தித்தாள் படிக்கும் வாய்ப்பும் அங்குதான் கிடைத்தது. இந்தச் செய்தித்தாள் தனது மனதின் மற்ற கதவுகளைத் திறந்து விடத் துவங்கியது என்றும், ஆர்.எஸ்.எஸ். தனது மனதிற்குள் புகுத்தியிருந்த தேசியம், நற்குண உயர்பண்பு, மனத்துறவு, ஆன்மீக இயல்பு ஆகியவைகள் ஓஷோவை படித்த பிறகுதான் மாறத் துவங்கியது என்றும் கூறுகிறார், பன்வர் .

இந்த நிலையில், 1990-ஆம் ஆண்டு கரசேவை செய்ய அயோத்திக்கு சென்றபோது இறந்துபோன தொண்டர்களுக்கும், ஆர்.எஸ்.எஸ் அமைப்பிற்காக பில்வாராவில் இறந்தவர்களுக்கும் சேர்த்து “தியாகிகள்” தினம் கொண்டாட 1991-ஆம் ஆண்டு மே மாதம் பில்வாராவில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் சிர்தியாஸ்

வரும்போது அவர்களுக்கு உணவளிக்க முன் வருகிறார் பன்வர் மெக்வன்ஷி.

ஆனால், அவர் தந்தை நாராயணன்லால் “ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் உயர்சாதியினர், அவர்கள் போலி வேடதாரிகள்; பொதுவில் ஒன்றைச் சொல்வார்கள்; ஆனால், தனிமையில் வேறு ஒன்றைச் செய்வார்கள், அவர்கள் நமக்கு எதிரான விஷம் நிறைந்தவர்கள். அதனால், நமது வீட்டில் தயாரிக்கப்படும் உணவை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்” என்று எச்சரிக்கிறார்.

ஆனால், பன்வர் மெக்வன்ஷி நம்பிக்கையுடன் தான் ஆர்.எஸ்.எஸ்-இன் முக்கிய பொறுப்பில் இருப்பவன், அதனால் என்னை உதாசீனப்படுத்த மாட்டார்கள் என்று அவரை சமாதானப்படுத்தி பூரியும், உருளைக்கிழங்கும் தயாரிக்கச் சொல்கிறார். ஆனால், ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் சாப்பிடுவதற்கு தங்களுக்கு நேரம் இல்லை என்று கூறி, உணவை பொட்டலமாக கட்டித் தருமாறும், தாங்கள் அடுத்த ஊருக்குச் செல்லும் வழியில் அதை சாப்பிட்டுக் கொள்கிறோம் என்று கூறுகிறார்கள். பன்வர் மெக்வன்ஷியும் பூரியையும் கிழங்கையும் பொட்டலம் செய்து தருகிறார். ஆனால், சங் பரிவாரங்கள் பன்வர் மெக்வன்ஷி கொடுத்த உணவை சாப்பிடாமல் ஊருக்கு வெளியே தூக்கி எறிந்துவிட்டுச் செல்கிறார்கள்.

இந்த தகவலை அறிந்த பன்வர் மெக்வன்ஷிக்கு பெரும் அவமானமும், கோபமும் ஏற்படுகிறது. இந்த தீண்டாமை செயலினால் அவரது மனம் பேதலித்துப்போகிறது. அவர்கள் தனது வீட்டின் உணவை நிராகரித்ததன் மூலம் தன்னை அவமானப்படுத்தியதாக உணர்ந்ததாகவும், தன்னை வெகு தூரத்தில் வீசி எறிந்தது போல் இருந்தது என்றும், தான் அவர்களிடமிருந்து தொலைவில் இருப்பது போல உணர்ந்ததாகவும் குறிப்பிடுகிறார், பன்வர்.

தனக்கு ஏற்பட்ட இந்த தீண்டாமை கொடுமையை அவர் மாவட்ட, மண்டல பிரச்சாரகர்களுக்கு எடுத்துச் செல்கிறார். ஆனால், யாரும் அவருக்கு சரியான பதிலைக் கூறவில்லை. ஆனால், நந்தலால் காஸ்ட் என்ற பனியா பொறுப்பாளர் மட்டும் “சங் அமைப்பின் எல்லா முயற்சிகளுக்குப் பிறகும், இந்து சமுதாயம் ஒன்றாக ஆகவில்லை. நம்மைப் பொறுத்தவரை எந்த நாளிலும் உங்களுடன் ஒன்றாக அமர்வோம், ஒரே தட்டில் உணவு உண்போம்.

ஆனால், சங் பரிவாரத்தினருக்கு தாழ்த்தப்பட்ட சாதியினர் வீட்டிலிருந்து உணவு கொடுப்பது அவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்திவிடும். அவர்கள் மிகவும் கோபம் கொள்வார்கள். அவர்கள் விலகிச் சென்று விடுவார்கள்” என்று கூறுகிறார். அவரது வார்த்தைகள் தன்னைக் கல்லாக மாற்றியதாகக் கூறுகிறார் பன்வர் மெக்வன்ஷி.

தனக்கு நியாயம் கிடைக்கும் வரை விடக் கூடாது என்று கருதி இந்த சம்பவத்தை பற்றி நாக்பூரில் இருக்கும் சர்சங்க்லாக் தேவரஸ் அவர்களுக்கு எழுதுகிறார். ஆனால், அவரிடமிருந்தும் பதில் கிடைக்கவில்லை. அதன்பிறகு சங் அமைப்பிலிருந்து முற்றிலும் உடைத்துக் கொண்டு வெளியேறுகிறார். சங் பரிவாரங்களின் முகத்திரையை கிழித்து அம்பலப்படுத்த வேண்டும் என்ற உத்வேகம் அவருக்குள் எழுகிறது. ஆர்.எஸ்.எஸ்-க்கு எதிர் திசையில் அவரது பயணம் துவங்குகிறது.

1992 டிசம்பர் 6-இல் பாபர் மசூதி இடிக்கப்படும் போது அவர் பில்வாராவில் உள்ள அம்பேத்கர் விடுதியில் இருக்கிறார். இப்போது அவர் ஒரு கரசேவர் அல்ல. சங்கிகளால் தீண்டாமை சுவர்களுக்குள் அடைக்கப்பட்ட ஒரு தலித். அந்த சூழ்நிலையில் அவருக்கு நௌசாத்-ஹதர்-எ- கர்ரார் என்ற இஸ்லாமிய நண்பரின் அறிமுகம் கிடைக்கிறது. அவருடன் ஏற்பட்ட உரையாடல்கள் வழியாக ஏற்பட்ட தெளிவின் மூலம் முஸ்லிம்களின் மீது கொண்டிருந்த வெறுப்பு பனிக்கட்டி போல் உருகியது என்கிறார் பன்வர் மெக்வன்ஷி.

அவர்கள் இருவரும் மாணவர்களை

ஆர்.எஸ்.எஸ். வலையில் சிக்கவிடாமல் தடுப்பதற்கும், பல்கலைக்கழகத்திற்குள் குழப்பம் விளைவிக்கும் ABVP (தலிபானின் இந்திய வடிவம் என்கிறார் பன்வர் மெக்வன்ஷி) அமைப்பிற்கு எதிராக செயல்படவும் மாணவர் அமைப்புகளை உருவாக்க நினைத்தார்கள். அதனால், 1993 டிசம்பரில், பன்வர் மெக்வன்ஷி "வித்தியார்த்தி அதிகார் ரக்ஷக் சங் (VARS - மாணவர் உரிமை பாதுகாப்பு மையம்)" என்ற அமைப்பையும், நௌசாத் "இஸ்லாமிய சேவா சங்கத்தையும்" துவக்கினார்கள். இவை இரண்டும் ஆர்.எஸ்.எஸ்-இன் நடவடிக்கையை அம்பலப்படுத்தும் அமைப்புகளாக இருந்தன. இருந்தாலும் போலீஸ் தொல்லைகளால் இந்த அமைப்புகள் ஆர்.எஸ்.எஸ்-க்கு எதிராக வெற்றிகரமாக செயல்பட முடியவில்லை என்கிறார் பன்வர் மெக்வன்ஷி. அதனால், நௌசாத் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிய - லெனினிய) பிரிவுக்கு சென்றுவிட்டார். பன்வர் மெக்வன்ஷி-க்கு அம்பேத்கரை போல் இந்து மதத்தை விட்டு வெளியேறும் எண்ணம் எழுகிறது !.

மதமாற்றம் பற்றி சிந்திக்கும் போது சீக்கியம், ஜைனம், பௌத்தம் போன்ற மதங்கள் "இந்து மதத்தின் பாகங்கள்" என்று சங் பரிவாரங்கள் சொல்லி வருவதால் அந்த மதங்களுக்கு மாறுவதை பன்வர் மெக்வன்ஷி விரும்பவில்லை. அதே சமயத்தில் இஸ்லாம் மதத்திற்கு செல்வதை விட கிறித்துவ மதத்திற்கு செல்வதை விரும்புகிறார். அதனால் பாப்டிஸ்ட், மேதேடிஸ்ட், சிரியன் மற்றும் கத்தோலிக்க தேவாலயங்களுக்கு சென்று தன்னை கிறித்துவ மதத்தில் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறார். ஆனால், இவரின் ஆர்.எஸ்.எஸ். தொடர்பை நன்கு அறிந்திருந்த கிறித்துவர்கள் இவரை ஆர்.எஸ்.எஸ்-இன் உளவாளி என்று கருதி கிறித்துவ மதத்தில் சேர்த்துக் கொள்ள மறுத்து விடுகிறார்கள்.

ஒரு வழியாக ஜோத்பூர் பாதிரியார் பாவெஸ் அவர்களை சந்தித்து வேண்டுகோள் வைக்கிறார். அவர் இவரை நம்பினாலும் உடனடியாக கிறித்துவ மதத்தில் சேர்த்து கொள்ளாமல், மத போதனைகளை முதலில் கடைபிடித்து வருமாறும், தக்க சமயத்தில் சேர்த்துக் கொள்கிறேன் என்றும் கூறுகிறார். சில நாட்கள் இயேசுவின் போதனைகளை கற்று வருகிறார். ஆனால், கிறித்துவம் முழுவதும் இயேசுவை சுற்றியே சுழல்வதாக இருப்பது அவருக்கு வெறுப்பைத் தருகிறது. "ஒரு சாக்கடையில் இருந்து தப்பி ஒரு கிணற்றுக்குள் விழுந்தது" போன்ற உணர்வு எழுந்ததால் அவரால் கிறித்துவத்தை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. ஆனால், இயேசுவை மட்டும் ஏற்றுக் கொள்ள முடிந்தது என்கிறார்.

1995-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மீண்டும் தன் கிராமத்திற்குத் திரும்புகிறார். அவரது பார்வை அம்பேத்கர் மீது ஆழமாக பதிகிறது. இந்துமதத்தின் புதிர்கள், சாதி ஒழிப்பு போன்ற நூல்களை வாசிக்கிறார். அந்நூல்கள் அவருக்கு பிராமணீயத்தை புரிய வைத்தது. மூடப்பட்டிருந்த அவரது மனக்கதவுகள் படபடவென்று திறந்து கொள்கின்றன. அதன் பிறகு கபீர், பெரியார் மற்றும் பூலே ஆகியோர்களின் படைப்புகளைத் தேடித்தேடி படிக்கிறார். ஒரு சங்கியாக இருந்த பன்வர் மெக்வன்ஷி ஒரு கிளர்ச்சியாளனாக உருமாறத் தொடங்கினான்.

**சமூகத்தின் நலனில் கவனம் செலுத்த ஆரம்பித்த பன்வர் மெக்வன்ஷி சங்கிகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை நடத்துகிறார். குறிப்பாக, பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் தலித்துகள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேருவதற்கு பெரும் தடையாக மாறுகிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இவருக்கு எதிராக பல்வேறு தாக்குதல்களை அரங்கேற்றுகிறது.**

சமூகத்தின் நலனில் கவனம் செலுத்த ஆரம்பித்த பன்வர் மெக்வன்ஷி சங்கிகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை நடத்துகிறார். குறிப்பாக, பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் தலித்துகள்

ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேருவதற்கு பெரும் தடையாக மாறுகிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இவருக்கு எதிராக பல்வேறு தாக்குதல்களை அரங்கேற்றுகிறது. அவற்றை எல்லாம் தனது தந்தை, சகோதரர் பத்ரிலால் மற்றும் நண்பர்கள் உதவியுடன் எதிர் கொள்கிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பன்வர் மெக்வன்ஷி-ன் வலுவான எதிர் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் திணறுகிறது.

பின்னர் 2001, ஜனவரி 14-இல் அவரும், அவரது 13 நண்பர்களும் சேர்ந்து "டைமண்ட் இந்தியா" என்ற பத்திரிக்கையை ஆரம்பிக்கிறார்கள். இந்தப் பத்திரிகை ஆர்.எஸ்.எஸ்-இன் செயல்பாட்டை தோலுரித்துக்காட்டி மக்களுக்கு விழிப்புணர்வைத் தந்தது. பன்வர் மெக்வன்ஷி ஆளுமை மிக்க பத்திரிக்கையாளராக வளர ஆரம்பித்தார். எங்கெல்லாம் ஆர்.எஸ்.எஸ் தமது நாசக்கரங்களை நீட்டி கொடுமைகள் புரிகிறதோ அங்கெல்லாம் பன்வர் மெக்வன்ஷியின் கரம் நீண்டது.

குறிப்பாக, ராஜஸ்தானில் உள்ள அசிந்திக்கு அருகிலுள்ள லோவிந்தபுரா கிராமத்தில் இருந்த மசூதி இடிப்பு, தண்பி பார்யா கிராமத்தில் கண்டேஸ்வரி பாபா நடத்திய யாகத்தில் தலித்துகள் புறக்கணிப்பு போன்ற நிகழ்வுகளில் தலையிட்டு அவற்றை செய்திகளாக்கி பிரச்சனை தீர நடவடிக்கை எடுத்தார்.

2002-இல் குஜராத்தில் நடந்த கலவரத்தை நேரில் சென்று ஆய்வு செய்து, "தலிபானி இந்துக்களே, கவனியுங்கள்" என்று டைமண்ட் இந்தியா பத்திரிக்கையில் தலையங்கம் எழுதினார். அதில், "தேவகி-ன் எட்டாவது குழந்தை தன்னைக் கொன்றுவிடும் என்று தெரிந்திருந்த கம்சன் கூட, அவளது கர்ப்பத்தைக் கிழித்துத் திறக்கவில்லை. இன்னும், இரவும் -பகலும் யாரெல்லாம் "ஜெயகிருஷ்ணா" என்று பஜனை செய்து கொண்டிருந்தார்களோ, அவர்களால் கம்சன் கூட கனவு கண்டிராதவாறு அப்பாவிகள் உயிரோடு எரிக்கப்பட்டார்கள். பொது இடங்களில், பெரும் கூட்டத்தின் முன்னிலையில் பெண்கள் கூட்டுக் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார்கள் - இது தான் அவர்களின் இந்துயிசமா ?" என்று கடுமையாக எழுதியிருந்தார்.

சங்கிகளை "இந்து தலிபான்கள்" என்று அடையாளப்படுத்தப்பட்டது சங்கிகளுக்கு கோபமூட்டியது. அதனால், பில்வாராவில் இருந்த டைமண்ட் இந்தியா அலுவலகம் சூறையாடப்பட்டது. அந்த பத்திரிக்கைக்கு நன்கொடை கொடுத்தவர்கள் மிரட்டப்பட்டதால் அவர்கள் பின்வாங்கினார்கள். அதன்பிறகு டைமண்ட் இந்தியா வெளிவரவேயில்லை.

பின்னர், 2005-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் பில்வாரா மற்றும் மண்டல் பகுதிகளில் நடந்த இந்து - முஸ்லிம் கலவரங்களை விசாரிக்கும் "குடிமக்கள் விடுதலைக்கான மக்கள் ஒற்றுமை (PUCL)" நடத்திய உண்மை அறியும் குழுவில் சென்ற பன்வர் மெக்வன்ஷி, "அணுகும் பாசிசத்தின் காலடிச் சுவடுகள்" என்ற அறிக்கையை தயார் செய்து, அதை துண்டறிக்கையாக வெளியிட்டார். இது ராஜஸ்தானில் மிகப்பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியது. அவர் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியது ஆர்.எஸ்.எஸ். பன்வர் மெக்வன்ஷியின் தந்தை, சகோதரர் மற்றும் உறவினர்களால் எதிர் தாக்குதல் நடத்தப்பட்டது. சங்கிகள் பயந்து ஓடினார்கள்.

ஆனாலும், பன்வர் மெக்வன்ஷி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. இந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்குமாறு குல்தீப் நய்யார், ஹரிஷ் மந்தர், அருந்ததிராய், பாரத் தோக்ரா மற்றும் பிரபாஷ் ஜோஷி ஆகியோர்களை சந்தித்து உதவி கோரினார் பன்வர் மெக்வன்ஷி. இறுதியாக பிரபாஷ் ஜோஷி, அப்போதைய துணை ஜனாதிபதி பைரோன் சிங் செகாவத்திடம் பேசி பிரச்சனையை தீர்க்க உதவி செய்தார்.

மேலும், தேசிய அளவில்

பத்திரிக்கையாளர்களாலும், சமூக செயல்பாட்டாளர்கள் தலையீட்டாலும் இந்தப் பிரச்சனை சுமூகமாக முடிந்தது. PUCL அவருக்கு முழுமையாக ஆதரவு தந்ததை அவர் நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார். இருந்தாலும், எந்தவொரு தலித் அமைப்பும் அல்லது தலித் இலக்கியவாதிகளும் அவருக்கு ஆதரவாக குரல் எழுப்பாதது அவருக்கு ஆச்சரியம் தந்ததாக பதிவு செய்துள்ளார்.

மொத்தத்தில் இந்த நூல் பன்வர் மெக்வன்ஷி என்ற சமூகப் போராளியை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. ஆர்.எஸ்.எஸ். மற்றும் சங் பரிவாரங்களுக்கு எதிரான அவரின் திடமான போராட்டம் நம்பிக்கை தருவதாக இருக்கிறது. ஒரு தனி மனிதனாக ஆர்.எஸ்.எஸ்-க்கு எதிராக அடுக்கடுக்கான பல போராட்டங்களை நிகழ்த்தி இருக்கிறார். குறிப்பாக, வட மாநிலங்களில் தலித் மக்கள் ஆர்.எஸ்.எஸ்-இல் சேருவது தடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தை இந்தியாவின் மூலை முடுக்கில் எல்லாம் கொண்டு சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இந்த நூல் மூலம் பன்வர் மெக்வன்ஷி, தான் ஒரு இந்துவாக இருக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்; ஒரு இந்திய குடிமகனாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

**இந்த புத்தகத்தை வாசித்தபோது எனக்கு ஜான் பெர்க்கின்ஸ் எழுதிய "ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்" என்ற புத்தகம்தான் ஞாபகம் வந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக வலைப்பின்னலை அந்தப் புத்தகம் வெளிப்படுத்தியது போல், இந்தப் புத்தகம் இந்துத்துவ பாசிசத்தை வெளிப்படுத்தியுள்ளது. இருந்தாலும், இந்தப் புத்தகம் எனக்குள் நிறைய கேள்விகளை எழுப்பியுள்ளது.**

- இந்தியா முழுவதும் விஷவித்துக்களாக பரவியுள்ள இந்த ஆர்.எஸ்.எஸ் கும்பலிடமிருந்து இந்திய நாட்டை எப்படி மீட்டெடுப்பது ?
- இடது சாரி, தலித் மற்றும் மதச்சார்பற்ற அமைப்புகள் இந்த இந்துத்துவ-பாசிச அமைப்புக்கு எதிராக ஏன் வலுவாக போராடுவதில்லை ?
- நாடு முழுவதும் கிட்டத்தட்ட *57,000* கிளைகளையும், *6* மில்லியன் உறுப்பினர்களையும், *34* துணை அமைப்புகளையும் கொண்ட இந்த இந்துத்துவ - பாசிச அமைப்பை வீழ்த்தி எவ்வாறு நம் நாட்டை மதச்சார்பற்ற நாடாக மீண்டும் புத்தாக்கம் செய்வது ?

இந்த கேள்விகளுக்கான பதிலை காலம் சொல்லும் வரை காத்திருக்கத்தான் வேண்டும். நல்லதொரு புத்தகத்தை தமிழுக்கு கொடுத்த மொழிபெயர்ப்பாளர் ச.நடேசனுக்கு நன்றி!

(குறிப்பு : இந்த நூலை எழுதிய பன்வர் மெக்வன்ஷி (Bhanwar Maghwanshi) ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மண்டல் கிராமத்தின் அருகில் உள்ள சிர்தியாஸ் என்ற கிராமத்தில் *1975* இல் பிறந்தவர். தனது *13* வயதில் ராஷ்டிரிய சுயம்சேவக் சங் -கில் (RSS) சேர்ந்த இவர் பின்னர் *1991* இல் ஆர்.எஸ்.எஸ் லிருந்து விலகி தற்போது ஒரு தலித் இயக்க செயல்பாட்டாளராகவும் பத்திரிக்கையாளராகவும் இருந்து வருகிறார். அவர் தனது நேரத்தை சிர்தியாஸில் உள்ள அம்பேத்கர் பவனைக் கவனித்துக் கொள்வதற்கும், நாடு முழுவதும் அவரைக் கொண்டு செல்லும் அரசியல் வேலைகளுக்கும் இடையில் பிரித்துக் கொள்கிறார். இந்த நூல் முதலில்" நான் கரசேவகனாக இருந்தேன் "என்ற தலைப்பில் ஹிந்தியில் எழுதப்பட்டது. பின்பு " இந்துவாக நான் இருக்க முடியாது - ஆர்.எஸ்.எஸ்ஸில் ஒரு தலித்தின் கதை (I could not be Hindu-Story of a Dalit in the RSS)" என்ற தலைப்பில் தமிழில் வெளிவருகிறது.)

**நன்றி : வினவு.காம்.**

(இந்த கட்டுரையில் தாலிபான் இந்துக்கள் என்பது போன்ற வாசகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் எதிரிகளால் தாலிபான்கள் பற்றி பரப்பட்ட அவதூறுகளை நம்பியதன் காரணமாக இது போன்ற வாசகங்களை பயன்படுத்துகிறார்கள்).⦿

# நபிகளார் வாழ்வில் சமூக புறக்கணிப்பு

A.அமீரா

நபிமார்களின் வாழ்க்கையில் பல படிப்பினைகளை அல்லாஹ் கற்றுக் கொடுத்துள்ளான். நம்முடைய நபி முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கையில் அழகிய முன்மாதிரி இருக்கிறது என அல்லாஹ் கூறுகிறான்.பொதுவாகவே இக்காலத்து இளைஞர்கள் தாங்கள் விரும்புகிற விளையாட்டு வீரர்கள், நடிகர்கள் (இவர்கள் யாரென்று கூட தெரியாதவர்கள்) ஆகியோரின் வரலாற்றை தெரிந்து வைத்திருப்பார்கள். அப்படியிருக்க நமக்காக ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்பே கவலைப்பட்ட நம் அன்பிற்குரிய முஹம்மது நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையை படிப்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடந்த முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று சமூக புறக்கணிப்பு. இதை ஆங்கிலத்தில் சோசியல் பைகாட் (social boycott) என்பார்கள். சமூகப் புறக்கணிப்பு குறித்து இங்கு சுருக்கமாக பார்ப்போம்.

நபி(ஸல்) அவர்கள் தூதுத்துவத்திற்கு பிறகு மூன்று ஆண்டுகள் ரகசிய அழைப்பு பணி மேற்கொண்டார்கள். உமர்(ரலி) அவர்கள் இஸ்லாத்தை தழுவியதற்கு பின்னர் முஸ்லிம்கள் பகிரங்கமாக கஅபாவில் தொழுது வந்தார்கள். இதைக் கண்ட குறைஷியர் பொறுக்கமுடியாமல் ஒரு ஒப்பந்தத்தை எழுதி அதில் குறைஷிப் பெரியவர்கள் எல்லாம் கையொப்பமிட்டனர்.

அந்த ஒப்பந்தத்தில் எழுதியிருந்ததாவது, "பனூ ஹாஷிம்கள் முஹம்மதை நம்மிடம் ஒப்படைக்கும் வரை அவர்களிடம் நாம் எவ்விதமான தொடர்பும் கொள்ளக் கூடாது" என்பதே. இந்த ஒப்பந்தத்தை கஅபாவில் தொங்க விட்டிருந்தனர். (பனூ ஹாஷிம் என்பது நபி(ஸல்) அவர்களின் குடும்பத்தின் பெயர்)

இந்த ஒப்பந்தத்தின் மூலம் பனூ ஹாஷிம் குடும்பத்தில் பிளவை ஏற்படுத்துவது அந்த குறைஷிக் கயவர்களின் நோக்கம். அதன் பின் நபி(ஸல்) அவர்களை எளிதில் வீழ்த்தி விடலாம் என அவர்கள் நினைத்தார்கள். ஆனால் பனூ ஹாஷிம் குடும்பத்தாரோ தங்களின் குடும்பத்தை சேர்ந்த ஒருவரான முஹம்மது(ஸல்) அவர்களை குறைஷிகளிடம் ஒப்படைக்க நாடவில்லை. மாறாக நபி(ஸல்) அவர்களை பாதுகாக்கவே நாடினார்கள்.

அபூதாலிப் அவர்களின் அறிவுரைப்படி பனூ ஹாஷிம் குடும்பத்தார் தங்களுக்கு சொந்தமான அபூதாலிப் பள்ளத்தாக்கிற்கு சென்றனர். அங்கு நபி(ஸல்) அவர்களும் பனூ ஹாஷிம் குடும்பத்தாரும் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகினர். கொண்டுசென்ற உணவு தீர்ந்து விட்ட போது குறைஷிகளுக்குப் பயந்து வியாபாரிகள் பனூ ஹாஷிம் குடும்பத்தாருக்கு உணவுப்பொருட்கள் தருவதை தவிர்த்து வந்தனர்.பனூ ஹாஷிம் பெண்களும் குழந்தைகளும் பசியால் அழும் குரல்கள் மக்காவரை கேட்கும் அதை கேட்டு குறைஷியர் மகிழ்ந்தனர்.



தங்கள் குடும்பத்தை சேர்ந்த முஹம்மது நபி(ஸல்) அவர்களைப் பாதுகாப்பதற்காகத் தான் பனூ ஹாஷிம் குடும்பம் இத்தகைய இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டனர். எனினும் பனூ ஹாஷிம் குடும்பத்தில் பலர் முஸ்லிம்களாக மாறி இருக்கவில்லை. முஸ்லிம்களாக இல்லாதவர்களே தங்கள் குடும்பத்தினரான நபி(ஸல்) அவர்களை பாதுகாக்க இவ்வளவு முயற்சி எடுத்தபோது முஸ்லிம்களாகிய நாம் நம்முடைய உறவினர்களை எப்படி நடத்துகிறோம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தை குறைஷிகளிலேயே சிலர் ஆரம்பத்திலிருந்தே வெறுத்து வந்தனர். ஹிஷாம் இப்னு அம்ர் என்பவர் ஜுஹைர், முத்இம் இப்னு அதி, அபுல் புக்தரீ, ஸம்ஆ ஆகியோருடன் சேர்ந்து இந்த ஒப்பந்தத்தை கிழிக்க நாடினார். அனைவரும் கஅபாவில் ஒன்றுகூடியபோது ஜுஹைர், "நாம் சாப்பிடுகிறோம், ஆடைகளை அணிகிறோம், ஆனால் ஹாஷிமின் குடும்பமோ அழிந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டும் என்றார்.. அபூஜஹ்ல் இதை எதிர்த்தான். அப்போது ஸம்ஆ "நீ ஒரு பொய்யன் இந்த ஒப்பந்தத்தில் எங்களுக்கு விருப்பம் இல்லை" என்றார். அபுல் புக்தரீ "ஆம் ஸம்ஆ உண்மையே கூறுகிறார்" என்றார். இவ்வாறு முத்இம் ஹிஷாம் ஆகியோரும் கூறினர். இதற்குப்பின் முத்இம் இந்த ஒப்பந்தத்தை கிழிக்க சென்று பார்த்த போது 'பிஸ்மிகல்லாஹும்ம' என்ற எழுதப்பட்டதையும் 'அல்லாஹ்' என்று எழுதப்பட்டிருந்ததையும் தவிர அனைத்தையும் கரையான் தின்று விட்டிருந்தது.

பிறகு அந்த ஒப்பந்தம் முழுவதுமாக கிழித்தெறியப்பட்டது. பிறகு நபி (ஸல்) அவர்களும் பனூ ஹாஷிம் குடும்பத்தாரும் கணவாயிலிருந்து வெளியேறினர். அப்போது இறைமறுப்பாளர்கள் நபித்துவத்தின் மாபெரும் அத்தாட்சியை பார்த்தனர். இருப்பினும் அவர்களின் இதயங்களோ,

"அவர்கள் எந்த அத்தாட்சியை கண்ட போதிலும் அதனை புறக்கணித்து இது சகஜமான சூனியம் தான் என்று கூறுகின்றனர்." (அல்குர்ஆன் 54 :2) என்று அல்லாஹ் கூறுவது போன்றே இருந்தது.

இதுபோன்ற சமூகப் புறக்கணிப்பு நிகழ்வுகள் நம் சமூகத்திலும் சில இடங்களில் நிகழ்கின்றன. இறைமறுப்பாளர்களான ஆட்சியாளர்கள் இஸ்லாமியர்களை ஒன்றும் இல்லாதவர்களாக ஆக்க துடித்துக் கொண்டிருக்கின்றனர்.ஆனால் நம்முடைய நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடந்த இச்சம்பவத்தில் இருந்து நமக்கு கிடைக்கும் படிப்பினை ஒரு பெரும் சமூகமே நம்மை புறக்கணித்தாலும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கிடைக்கும் உதவியை அவர்களால் தடுத்துவிட முடியாது என்பதே. நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையை படித்து ஈருலகிலும் வெற்றி பெற அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் புரிவானாக!.


## அன்புள்ள அல்ஜன்னத் வாசகர்களே!

**அல்ஜன்னத்தில் வெளியாகும் கட்டுரைகளை வாசிப்பதோடு மட்டுமல்லாமல் உங்கள் விமர்சனங்களையும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.**

**வாட்ஸ்அப் - 9840828225 / 9841200682**

**மின்னஞ்சல் -** jaqhaljannath@gmail.com

**ஆரோக்கியமான விமர்சனங்கள் அல்ஜன்னத்தில் வெளியிடப்படும்.**

**உங்களின் மார்க்கம் தொடர்பான கேள்விகளை அனுப்புங்கள். பதிலளிக்கப்படும் இன்ஷா அல்லாஹ்.**

**கட்டுரை அனுப்புவோர் பிரதிமாதம் 10-ம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

# இஸ்திஆதாவின் விளக்கம்



குர்ஆன் ஓதுவதற்கு முன் இஸ்திஆதா ஓதுவது மார்க்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது இஸ்திஆதா என்றால் அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம் என்று கூறுவதாகும்

மேலும் (நபியே!) நீர் குர்ஆனை ஓதுவீராயின் (முன்னதாக) விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் காவல் தேடிக்கொள்வீராக. (அல்குர்ஆன் 16:98)

அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம் என்பது குர்ஆனில் உள்ள ஆயத்தல்ல என்பதில் உலமாக்கள் ஏகோபித்துள்ளார்கள் என்றாலும் பாதுகாவல் தேடுவதற்குரிய வாசகம் இது என்பதை அனைவரும் ஏற்றுகொண்டுள்ளார்கள்.

இமாம் தபரி அவர்களின் ஜாமிஉல் பயான்

இஸ்திஆதா என்றால் பாதுகாவல் தேடுவது என்று இமாம் தபரி அவர்கள் கூறினார்கள், "அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம் என்பதன் பொருள் ஷைத்தான் எனது மார்க்க விஷயத்தில் தீங்கிழைப்பதை விட்டும் சத்தியத்தை விட்டு என்னை தடுப்பதை விட்டும் அல்லாஹ்விடம் நான் பாதுகாவல் தேடுகிறேன் என்பதாகும் . இமாம் தப்ரி அவர்களின் ஜாமிஉல் பயான்

ஷைத்தான் என்பதற்குரிய விளக்கமாக இமாம் தப்ரி கூறியிருப்பது: அரபு மொழியில் வரம்புமீறி அழிச்சாட்டியம் செய்யக்கூடிய ஜின், மனிதன் மற்றும் விலங்கினங்கள் என அனைத்தையும் குறிக்கும் இவ்வாறு தான் மகத்துவமிக்க அல்லாஹ் கூறியுள்ளான்

இவ்வாறே நாம் ஒவ்வொரு நபிக்கும் மனிதர்கள் மற்றும் ஜின்களில் உள்ள ஷைத்தான்களைப் பகைவர்களாக்கினோம். அவர்களில் சிலர், வேறு சிலரிடம் ஏமாற்றும் நோக்குடன் அலங்காரமான சொற்களைக் கூறிக் கொண்டேயிருக்கின்றனர். (6:112)

ஜின்களில் ஷைத்தான் இருப்பது போன்று மனிதர்களிலும் ஷைத்தான்களை

தொடர்ச்சி பக்கம் - 28

# ஈமானை கற்போம்!



ஜுன்துப்(ரழி) அவர்கள் கூறினார்கள், "நாங்கள் பருவவயதை நெருங்கிக் கொண்டிருக்கும் சிறார்களாக அல்லாஹ்வின் தூதரோடு இருந்தோம். நாங்கள் குர்ஆனை கற்றுக்கொள்வதற்கு முன் ஈமான் என்றால் என்ன என்பதை கற்றுக்கொண்டோம். அதன் பின்னர் தான் நாங்கள் குர்ஆனை கற்றுக்கொண்டோம் அதன் மூலம் எங்களது ஈமானை அதிகரிக்கச் செய்தோம். இன்றைக்கு நீங்கள் ஈமானை கற்றுக்கொள்வதற்கு முன்பாக குர்ஆனைக் கற்றுக்கொள்கிறீர்கள் நூல்:அல் முஃஜமுல் கபீர் லித் தப்ரானி (1678) ஷுஅபுல் ஈமான் லில்பைஹகி (50) சுனன் இப்னு மாஜா (61) இதனை இமாம் அல்பானி அவர்கள் ஸஹீஹ் என்று கூறுகிறார்கள்.

**இந்த ஹதீஸில் உள்ள சில பயன்கள்**

1.சிறுவயது ஸஹாபாக்கள் ஒன்றை சொல்வதற்கும் செய்வதற்கும் முன் ஈமானை கற்றுக்கொள்வதில் ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள்

2.அதே போன்று சிறுவயது ஸஹாபாக்கள் குர்ஆனைக் கற்பதற்கும் அதனை மனனம் செய்வதற்கும் ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள்.

3.கல்வி கற்பதில் அவர்களுக்கு இருந்த ஆர்வத்தையும் அவர்களின் பொறுமையையும் எடுத்துக்காட்டுகிறது.

4. அல்லாஹுவையும் மலாயிக்கா,வேதங்கள்,தூதர்கள் மறுமை நாள் இன்னும் விதியின் நன்மை,தீமை ஆகிய அனைத்தையும் நம்பிக்கை கொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இவைகள் தான் சரியான அகீதாவின் அடிப்படைகள். இன்னும் ஸஹாபாக்கள் சிறுவயதிலேயே குர்ஆனைக் கற்பதற்கும் அதை ஓதுவதற்கும் முன்பாக கற்றுத்தேர்ந்த ஈமானின் தூண்கள் அவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை ஓதி தங்களுக்கு மத்தியில் அதன் வசனங்களைக்குறித்து ஆய்வு செய்தபோது அவர்களின் ஈமான் அதிகரித்தது இன்னும் அவர்களின் கொள்கை வலுவானது.

5.சிறுவர்களின் உள்ளத்தில் கொள்கையை நடுவதின் முக்கியத்துவத்தை இச்செய்தியின் மூலம் அறிகிறோம்.

6.எல்லா கல்விக்கும் முன்னதாக அகீதாவை தான் கற்கவேண்டும்.

பக்கம் - 26ன் தொடர்ச்சி

ஆக்கியுள்ளான். ஒவ்வொரு இனத்திலும் உள்ள அழிச்சாட்டியம் புரியக்கூடியவைகளுக்கு ஷைத்தான் என பெயர்சூட்டக் காரணம் அந்த இனத்தின் பண்புகளையும் செயல்களையும் விட்டு விலகி நன்மையை விட்டு தூதரமாகி விடுவதால் இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது என்று இமாம் தபரி கூறியுள்ளார்கள்

**ரஜீம் என்பதன் பொருள்**

சபிக்கப்பட்டவன் என்பது தான் இதன் பொருள் . அடிப்படையில் ரஜம் என்றால் எறியப்படுவது என்பதாகும். ஷைத்தானுக்கு ரஜீம் என்று சொல்லப்படுவது அவனை அல்லாஹ் வானத்திலிருந்து விரட்டினான் இன்னும் எரிகற்களைக் கொண்டு அவன் எறியப்படுவதாலும் ரஜீம் என்று பயன்படுத்தப்படுகிறது.

(இமாம் தபரி அவர்களின் ஜாமிஉல் பயான் )

ஷைத்தான் ஏதாவதொரு (தவறான) எண்ணத்தை உம் மனத்தில் ஊசலாடச் செய்து (தவறு செய்ய உம்மைத்) தூண்டினால், அப்போது அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவீராக! மெய்யாகவே அவன் செவியேற்பவனாகவும், (யாவற்றையும் நன்கு) அறிபவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 7:200)

(நபியே!) நீர் அழகிய நன்மையைக் கொண்டு தடுத்துக் கொள்வீராக! அவர்கள் வர்ணிப்பதை நாம் நன்கறிவோம்.

இன்னும்: நீர் கூறுவீராக! “என் இறைவனே! ஷைத்தானின் தூண்டுதல்களிலிருந்து நான் உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன்”

(அல்குர்ஆன் 23:96,97)

நன்மையும் தீமையும் சமமாக மாட்டா, நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது, யாருக்கும் உமக்குமிடையே, பகைமை இருந்ததோ, அவர் உற்ற நண்பரைப் போல் ஆகிவிடுவார்.

பொறுமையாக இருந்தார்களே அவர்கள் தவிர வேறு யாரும் அதை அடைய மாட்டார்கள்; மேலும், மகத்தான நற்பாக்கியம் உடையவர்கள் தவிர, வேறு யாரும் அதை அடைய மாட்டார்கள்.

உங்களுக்கு ஷைத்தானிடத்திலிருந்து ஏதேனும் ஊசலாட்டம் (தீயதைச் செய்ய) உம்மைத் தூண்டுமாயின், உடனே அல்லாஹ்விடம் காவல் தேடிக் கொள்வீராக! நிச்சயமாக அவன் (யாவற்றையும்) செவியேற்பவன்; நன்கறிபவன். (அல்குர்ஆன் 41:34,36)

இவை ஒரே பொருளில் அமைந்த மூன்று வசனங்களாகும். இவ்வசனத்தில் அல்லாஹ் மனித எதிரிக்கு நன்மைபுரியுமாறு கட்டளையிடுகிறான் அதன் மூலம் நட்பு நேசம் ஆகிய அவனது இயல்பான குணத்தின் பால் அவனை திருப்புவதற்காக இவ்வாறு செய்யவேண்டுமென்று ஏவுகிறான் அதே வேளையில் ஷைத்தானிய எதிரியிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடவேண்டுமென்று ஏவுகிறான் ஏனெனில் ஷைத்தானைப் பொறுத்தவரையில் அவன் மனிதனின் அழிவை விரும்பக்கூடியவன் அவனுக்கும் மனிதகுலத்தின் தந்தையான ஆதமுக்கும் மத்தியிலான கடும் பகைமையின் காரணமாக மனிதனிடமிருந்து எந்த நன்மையையும் அவன் அங்கீகரிக்கமாட்டான்.

பார்க்க: அல்குர்ஆன் 7:27. 35:61. 8:50

நமது தந்தையிடம் பொய்யாக சத்தியம் செய்து அவருக்கு நலன்

நாடுபவன் என்று பொய்யுரைத்தான் அப்படியிருக்கும் போது நம்மிடம் அவன் எவ்வாறு நடந்துகொள்வான் என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும்

*பார்க்க: அல்குர்ஆன் 38:82,83. 16:98,99*

அபூஸஈத் அல்குத்ரி(ரழி) அவர்கள் அறிவித்தார், "நபி(ஸல்) அவர்கள் இரவில் தொழுகைக்காக நின்றால் தக்பீர் சொல்லுவார்கள் பின்னர் அல்லாஹுவே நீ பரிசுத்தமிக்கவன் உனது புகழை துதிக்கிறேன் உனது பெயர் பரகத் பொருந்தியது உனது மகத்துவம் உயர்வானது உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் இல்லை பின்னர் அல்லாஹு அக்பர் கபீரா என்று கூறி அதன் பின்னர் விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அவனது ஊசலாட்டத்தைவிட்டும் அவனது ஊதுதல் மற்றும் துப்புதலை விட்டும் யாவற்றையும் அறிந்தவனும் செவியேற்பவனுமாகிய அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன் என்று கூறுவார்கள்.

*நூல் : சுனனுத்திர்மிதி 242, சுனன் அபீதாவூத் (775) முஸ்னத் அஹ்மத் 11475*

பாதுகாவல் துஆவின் நுட்பம் என்னவெனில், அது மனிதனின் நாவை அவன் ஈடுபடும் வீணான காரியங்களிலிருந்து பாதுகாக்கிறது. இன்னும் அல்லாஹ்வின் வார்த்தைகளை ஓதுவதற்கு தோதுவாக நாவை தூய்மைப்படுத்துகிறது.

(தஃப்ஸீர் இப்னு கஸீர்)

வெளிப்படையான மறைமுகமான மனிதனின் எதிரியான ஷைத்தானை எதிர்கொள்வதற்கு மனிதன் இயலாதவனாகவும் பலவீனனாகவும் இருக்கிறான் என்பதை ஒப்புக்கொண்டு எல்லாவற்றின் மீதும் ஆற்றலுடைய அல்லாஹ்விடம் உதவியை இதன் மூலம் தேடுகிறான். ஷைத்தானை படைத்த அல்லாஹ்வையன்றி அவனை கட்டுப்படுத்தவோ, அவனை தடுக்கவோ வேறு யாரும் சக்திபெற மாட்டார் இன்னும் அவன் உபகாரத்தை ஏற்றுகொள்ளமாட்டான் மனித எதிரியைப்போன்று நன்மை செய்வதனால் உதவியும் செய்யமாட்டான்.

(தஃப்ஸீர் இப்னு கஸீர்)

குர்ஆனை ஓதுபவரிடம் மலாயிக்கா நெருங்குகிறார்கள் இன்னும் அவனது கிராஅத்தை செவிமடுக்கிறார்கள் ஷைத்தான் மலக்கின் எதிரியாவான். எனவே குர்ஆனை ஓதுபவர் தனது எதிரியான ஷைத்தானை தன்னை விட்டு தூரமாக்குமாறு அல்லாஹ்விடம் வேண்டுமாறு ஏவப்பட்டுள்ளார். அதன் மூலம் தான் அல்லாஹ்விற்குரியவர்களான மலாயிக்கா அவரிடம் வருவார்கள் இந்த விருந்தில் மலாயிக்காவும் ஷைத்தான்களும் ஒருபோதும் ஒன்றுசேரமாட்டார்கள்.

**பார்க்க: இமாம் இப்னுல் கய்யிம் அல் ஜவ்ஸியா அவர்களின் இகாஸத்துல் லஹ்ஃபான் 1\92**

*(இவ்வுலகில் இறைவனை வணங்குவதற்கென) மனிதர்களுக்கு அமைக்கப்பட்ட ஆலயங்களில் முதன்மையானது நிச்சயமாக "பக்கா"வில் (மக்காவில்) இருப்பதுதான். அது மிக்க பாக்கியமுள்ளதாகவும், உலகத்தாருக்கு நேரான வழியை அறிவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. அதில் தெளிவான அத்தாட்சிகளும் இருக்கின்றன. இப்ராஹீம் (தொழுகைக்காக) நின்ற இடமும் இருக்கின்றது. எவர் அதில் நுழைகின்றாரோ அவர் (பாதுகாப்பு பெற்று) அச்சமற்றவராகி விடுகின்றார். ஆகவே, எவர்கள் அங்கு பிரயாணம் செல்ல சக்தி உடையவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்குச் சென்று) அந்த ஆலயத்தை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் உலகத்தாரின் தேவையற்றவனாக இருக்கின்றான்.*

*(அல்குர்ஆன் 3:96,97)*



# விருந்து சாப்பிட வாங்க . . . !

செ.தாஹிர் சைஃபுத்தீன்
பாம்பன்

**க**தை சொல்லியான ஆதிஃப் தன் நண்பன் இம்தியாஸுக்கு ஒரு கதை சொன்னான்.

அந்த கதை இதுதான்:

அஸ்ஸலாமு அலைக்கும் . . .

வாசலில் நின்ற இருவரும் ஸலாம் கூறினர்.

வ அலைக்குமுஸ்ஸலாம் . . . வாங்க வாங்க . . .

இருவரையும் வரவேற்றார் அந்த பெரியவர்.

இரண்டு பேரையும் அமர வைத்து விட்டு, வேகமாக சென்று வீட்டின் கொள்ளைப் புறத்தில் நின்ற கன்று குட்டி ஒன்றை அறுத்து, அதை சமைத்து ருசியான உணவை கொண்டு வந்து அந்த விருந்தினர் முன் வைத்து சாப்பிட அழைத்தார் பெரியவர்.

விருந்தினர் இருவரும் சாப்பிடாமல், உணவு என்பது கூட தெரியாமல் அமைதியாக இருந்தனர்.

சிறிது நேரம் ஆகியும், வலியுறுத்தி சாப்பிட சொல்லியும் அவர்கள் இருவரும் சாப்பிடவில்லை. இதைப்பார்த்த அந்த பெரியவர் உள்ளத்தில் சிறிது அச்சம் ஏற்பட்டது.

அப்போது, 'நாங்கள் இருவரும் வானவர்கள், உணவுகள் சாப்பிடுவது எங்கள் பழக்கம் அல்ல' என்றனர் அவர்கள்.

அப்பொழுது இப்ராஹீம் நபியின் அச்சம் விலகியது.

முன்பின் தெரியாத நபர்கள் தன்னை நாடி வந்தவுடன் அவர்களை கண்ணியப்படுத்தி உணவு கொடுக்கும் அந்த பெரியவர் தான் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் என்றான் ஆதிஃப்.

வந்தவர்களை வரவேற்பதும், அவர்களின் பசியைப் போக்குவதும் சிறந்த பண்பு.

ஹஜ்ஜுப் பெருநாளுக்கு டிரஸ் எடுத்தாச்சாடா என்று இம்தியாஸ் கேட்டான்.

இனிமே தான் எடுக்கனும்.

ஹஜ்ஜுப்பெருநாள் என்றாலே இப்ராஹீம் நபி தான் என்பது உலகத்துக்கே தெரியும். அந்த இப்ராஹீம் நபி யின் பண்புகளை நாமும் பின்பற்ற வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான். அவர்களிடம் காணப்பட்ட மிக உயர்ந்த பண்பான விருந்தினர்களை உபசரித்தல் என்ற நற்செயலை நாமும் வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்றான் ஆதிஃப்.

இன்ஷா அல்லாஹ் ஹஜ்ஜுப் பெருநாளுக்கு உனக்கு எங்க வீட்ல விருந்து, நீ மறக்காம வர வேண்டும் என்றான் ஆதிஃப், இம்தியாஸிடம்.

'நிச்சயமாக இப்ராஹீமிடமும் அவரைச் சார்ந்தவர்களிடமும் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது'

அல்குர்ஆன் - 60:04



# அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கான பகுத்தறிவு ஆதாரங்களும் மனித இயல்பு ரீதியான ஆதாரங்களும்


**மௌலவி அப்துல்லாஹ் மீஸானி**

*அழைப்பாளர், இலங்கை*


இயல்பு பாதிக்கப்படாதவர்களுக்கு இறைவன் இருக்கின்றான் என்பதற்கான ஆதாரங்கள் அவசியமில்லை. அவர்களும் ஆதாரங்களைத் தெரிந்து கொள்வது நம்பிக்கையை இன்னும் அதிகரிக்கும்.

ஆனால் தற்காலத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கும் சிந்தனைப் போரை எதிர்கொள்வதற்கு இவற்றை அறிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

ஏதோ ஒரு அதீத சக்தி உலகை இயக்குகின்றது என்ற நம்பிக்கை போதாது. மாறாக அறிவும் ஆற்றலும் ஞானமும் நிறைந்த ஒருவன் இருக்கின்றான் என்று நம்புவதே நோக்கமாகும்.

இறைவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கை மனித வாழ்வின் முதல் தரத் தேவையும் மறுக்க முடியாத உண்மையுமாகும். அதனை நாம் நிரூபிக்க முனையும் அசைக்கமுடியாதளவு உறுதியான ஆதாரங்களைக் கொண்டு மாத்திரமே நிரூபிக்க வேண்டும்.

அது மாத்திரமின்றி இறைவன் இருப்பதை நிறுவக்கூடிய பல்வேறு வகையான ஆதாரங்கள் உண்டு. நம்முடன் உரையாடுபவரின் பின்னணியைப் பொறுத்து அவற்றில் பொருத்தமான ஆதாரத்தை முன்வைத்து உரையாட வேண்டும்.

**அறிவின் மூலாதாரங்கள்**

ஒரு விடயத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் மூலாதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. புலன் ரீதியான ஆதாரங்கள்
2. பகுத்தறிவு ரீதியான ஆதாரங்கள்
3. தகவல்
4. மனித இயல்பு
5. நவீன விஞ்ஞான உண்மைகள்

நாத்திகர்கள், முதல் ஆதாரத்தை மாத்திரமே ஏற்றுக்கொள்வதனால்தான் கடவுள் மறுப்புக்கொள்கையைத் தழுவுகின்றனர். ஆனால் இங்கு குறிப்பிட்டுள்ள அனைத்து வழிகளும் அறிவைப் பெறுவதற்கான முக்கிய ஆதாரங்களாகும்.

குறிப்பாக மனிதப் புலன்களுக்கு

அப்பாற்பட்ட மறைவான உலகம் பற்றிய விடயங்களைத் தகவல்கள் மூலமே நாம் பெற முடியும். அதனையே நாம் இறைச்செய்தி - வஹீ - என்பதாகக் குறிப்பிடுவோம்.

**இறைவன் இருக்கின்றான் என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள்**

1. இல்லாமையிலிருந்து படைத்தல்
2. படைப்பினங்களில் காணப்படும் நுணுக்கம்
3. இறைவன் உள்ளான் என்ற நம்பிக்கை மனித இயல்பு
4. படைப்பினங்களிடம் காணப்படும் உள்ளுணர்வும் வழிகாட்டலும்
5. பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுதல்.
6. இறைத்தூதை நிரூபிக்கும் ஆதாரங்கள்

**முதல் ஆதாரம் : இல்லாமையிலிருந்து படைத்தல்**

படைப்பினங்கள் இருப்பதே படைப்பாளன் ஒருவன் இருக்கின்றான் என்பதற்கான பலமான ஆதாரமாகும்.

நுணுக்கமான இப்பிரபஞ்ச ஒழுங்குகளும் அற்புதமான மனித படைப்பும் உயிரினங்களின் அற்புதமான வடிவமைப்பும் மிகப்பெரும் ஆற்றல்மிக்க படைப்பாளன் ஒருவன் இருக்கின்றான் என்பதற்கான எடுத்துக் காட்டுகளேயாகும்.

பகுத்தறிவு ரீதியான இந்த ஆதாரத்தை அல்குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடுகின்றது. இவற்றை அல்குர்ஆன் குறிப்பிடும் பகுத்தறிவு ஆதாரங்கள் எனக் குறிப்பிடுவோம்.

'எப்பொருளுமின்றி அவர்கள் படைக்கப்பட்டனரா? அல்லது அவர்கள் படைக்கின்றவர்களா? அல்லது அவர்கள் வானங்கள் மற்றும் பூமியை படைத்தனரா? மாறாக, அவர்கள் உறுதியாக நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்.' **(52:35, 36)**

'நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா?' 'அதை நீங்கள் படைக்கின்றீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா? **(56:5859)**

'நீங்கள் பயிரிடுவதைப் பார்த்தீர்களா?'அதை நீங்கள் முளைப்பிக்கின்றீர்களா? அல்லது நாம் முளைப்பிக்கின்றோமா? **(56:63, 64)**

**படைப்பாளனை நிரூபிக்கும் படைப்பினங்கள்**

இந்த பிரபஞ்சமும் ஏனைய படைப்பினங்களும் இல்லாமையிலிருந்து தோன்றியவையாகும்.

**அந்த வாதங்கள் ஒவ்வொன்றும் எவ்வித சந்தேகத்துக்குமிடமற்ற விதத்தில் தெளிவானதாக இருந்தாலும் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துகொள்வதற்காக நாத்திகர்களினால் எழுப்பப்படும் ஆட்சேபனைகளை முறியடிப்பதற்காகவும் அவற்றுக்கான விரிவான ஆதாரங்களை அறிவது அவசியமாகும்.**

புதிதாக உருவாகிய ஒவ்வொன்றுக்கும் அதனை உருவாக்கிய ஒருவன் இருப்பது இன்றியமையாததாகும். எனவே படைப்பினங்களைப் படைத்த ஒரு காரண கர்த்தா, ஆக்கியவன் இருப்பது அத்தியாவசியமாகும்.

அது போன்றே இப்பிரபஞ்சத்திற்கு ஒரு ஆரம்பம் உண்டு. ஆரம்பம் உள்ள அனைத்துக்கும் அது உருவாவதற்கான காரணம் இருக்க வேண்டும். எனவே இல்லாமையிலிருந்து பிரபஞ்சத்தை உருவாக்கிய ஒருவன் இருக்க வேண்டும்.

அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கான இச்சான்று இரு பிரதானமான வாதங்களை உள்ளடக்கியுள்ளது.

அந்த வாதங்கள் ஒவ்வொன்றும் எவ்வித சந்தேகத்துக்குமிடமற்ற விதத்தில் தெளிவானதாக இருந்தாலும் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துகொள்வதற்காக நாத்திகர்களினால் எழுப்பப்படும்

ஆட்சேபனைகளை முறியடிப்பதற்காகவும் அவற்றுக்கான விரிவான ஆதாரங்களை அறிவது அவசியமாகும்.

**முதல் வாதம்**

**இப்பிரபஞ்சம் பூர்வீகமானதல்ல.**

**அதற்கு ஆரம்பம் உண்டு.**

இதன் கருத்து இப்பிரபஞ்சம் எதுவுமற்றதாக இருந்து பின்பு உருவாகியது என்பதாகும். இப்பிரபஞ்சம் இல்லாமையிலிருந்துதான் தோன்றியது என்பதை, நாம் காணும் பல விடயங்கள் இல்லாமையிலிருந்து தோன்றுவதைப் பார்த்து நமது புலன்களால் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியுமாக இருந்தாலும் இயற்கை நவீன விஞ்ஞானத்தின் பல்வேறு கண்டுபிடிப்புக்கள் இதனை இன்னும் உறுதிசெய்பவையாக உள்ளன.

**இது இறைவன் இருப்பதை ஏற்றுக்கொண்ட விஞ்ஞானிகளின் கருத்து மாத்திரமல்ல. இறைவனே இல்லையென மறுக்கும் விஞ்ஞானிகள் பலரும் இக்கருத்தைக் கூறியுள்ளனர்**

பல்வேறு துறைகளைச் சார்ந்த விஞ்ஞானிகளும் உலகம் இல்லாமையிலிருந்து உருவாகியதே என்பதையே ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பவுல் டேவிஸ் எனும் விஞ்ஞானி கூறுகின்றார், “இப்பிரபஞ்சம் ஒரு காலத்தில் இருக்கவில்லை என்பதே தற்காலத்தின் பிரதான கண்டுபிடிப்பாகும். John Cleveland Cotran என்பவர் இப்பிரபஞ்சம் படைக்கப்பட்டது என்பதே விஞ்ஞான உண்மையாகும் எனக் கூறியுள்ளார்.

இது இறைவன் இருப்பதை ஏற்றுக்கொண்ட விஞ்ஞானிகளின் கருத்து மாத்திரமல்ல. இறைவனே இல்லையென மறுக்கும் விஞ்ஞானிகள் பலரும் இக்கருத்தைக் கூறியுள்ளனர்.

கடும் நாத்திகவாதியான ஸ்டீவன் ஹோகிங் கூறுகின்றார், “பல்வேறு கோட்பாடு பரிசோதனை ஆதாரங்களின் அடிப்படையில் இந்த உலகம் ஆரம்பமான காலம் ஒன்று உண்டு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. 1970ம் ஆண்டு இதனை தெளிவான முறையில் நிறுவப்பட்டது. இக்கருத்தைப் பல நாட்களிலும் வலியுறுத்தியுள்ளதுடன் பிரபஞ்சம் பூர்வீகமானது என்ற வாதம் வேடிக்கையான முடிவுகளுக்கே இட்டுச் செல்லும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான பல்வேறு நியாயங்களையும் அவர் முன்வைத்துள்ளதுடன் பிரபஞ்சம் பூர்வீகமானது என்ற கருத்தைக் கூறும் பௌதீக விஞ்ஞானிகளுக்கு மறுப்பும் வழங்கியுள்ளார்.

**உலகம் தோன்றியதை நிரூபிக்கும் பல்வேறு அறிவியல் சான்றுகள் உள்ளன.**

**உ.ம் பெரு வெடிப்புக் கொள்கை**

பெரு வெடிப்புக் கொள்கையின்படி அண்டவெளியில் உள்ள பொருள்கள் அனைத்தும் 12 முதல் 14 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மிக அதிகமான அடர்த்தியுடன் கூடிய, சிறிய அளவினதான, தீப்பிழம்பாக இருந்திருக்கிறது. இன்று எங்களால் அறியப்படுகின்ற அண்டத்திலுள்ள பொருள்கள் அனைத்தும் சில மில்லி மீட்டர் அளவுக்குள் அடங்கியிருந்திருக்கும் எனக் கணிக்கப்படுகின்றது. இத் தீப்பிழம்பானது இன்று அறியப்படாத ஏதோ ஒரு காரணத்தினால் மிக வேகமாக விரிவடையத் தொடங்கிற்று. இதுவே பெரு வெடிப்பு (Big-Bang) எனப்படுகின்றது. ஒவ்வொரு விநாடியும் பல மடங்காக இவ் விரிவாக்கம் நடந்ததாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இவ்வாறு விரிவடைந்தபோது வெப்பம்

தணிந்த வளிமண்டலங்கள் ஆங்காங்கே விண்மீன் கூட்டங்களாக உருவாகியிருக்ககூடும் என அவர்கள் கூறுகிறார்கள். பல பில்லியன் ஆண்டுகள் கழிந்த பின்னும் அண்டம் இன்னும் விரிவடைந்து கொண்டே செல்வதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கண்டுபிடிப்பே உலகம் இல்லாமையிலிருந்து தோன்றியதற்கான பலமான ஆதாரமாகும் என நாத்திகரான விஞ்ஞானி ஸ்டீபன் ஹொக்கிங் உட்பட பல விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். குறித்த கண்டுபிடிப்பு இன்னும் கோட்பாட்டு அந்தஸ்தை தாண்டாதபோதும் அதுவே இது வரை உலகம் தோன்றியதை விளக்கும் கோட்பாடுகளில் சிறந்ததாக விஞ்ஞானிகளால் கருதப்படுகின்றது.

இன்று எப்படி நாத்திகர்களினால் ரிச்சர்ட் டாகின்ஸ் கொண்டாடப்படுகின்றாரோ, அதுபோல இருபதாம் நூற்றாண்டில் நாத்திகர்களால் கொண்டாடப்பட்ட பேராசிரியர் ஆண்டனி ப்ளூ (Antony Flew) பல்வேறு ஆய்வுகளின் பின் நாத்திகத்துக்கு விடைகொடுத்துவிட்டு ஆத்திகத்துக்குத் திரும்பிவிட்டார். பெரு வெடிப்புக் கொள்கை அவரது இந்த மாற்றத்தில் பெரும் பங்களிப்புச் செலுத்தியது. தவ்ராத் கூறும் கடவுள் கொள்கைக்கு சார்பானதாகவே இந்தக் கோட்பாடு உள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த பெரு வெடிப்புக்கொள்கை மதங்களை விமர்சிப்போரின் மீது பேரிடியாக வீழ்ந்தது. இதனால் இக்கொள்கை வெறுப்புக்குரியது விஞ்ஞான சிந்தனைக்கு வெறுப்பானது என்றெல்லாம் வர்ணித்துள்ளனர்.

**ஆதாரத்தின் இரண்டாவது அடிப்படை வாதம்.**

பிரபஞ்சமும் அதிலுள்ள அனைத்தும் இல்லாமையிலிருந்து தோன்றியவை அவற்றுக்கு ஆரம்பமுண்டு எனப் பார்த்தோம். தற்போது அதன் இரண்டாவது பகுதியைப் பார்ப்போம்.

புதிதாகத் தோன்றிய அனைத்தையும் உருவாக்கியவன் ஒருவன் கட்டாயம் இருக்க வேண்டும். ஏனெனில் உலகில் எதுவும் தானாகவோ, உருவாக்குபவன் ஒருவன் இன்றி உருவாகுவதோ சாத்தியமற்றதாகும். ஒவ்வொரு மனிதனும் ஆரம்பமாகப் புரிந்துகொள்பவைகளில் ஒன்றே இந்த அடிப்படையாகும். தமது அன்றாட வாழ்வில் கடைபிடிக்கும் ஒரு விடயமுமாகும்.

சிறுவர்கள் கூட அவர்களுக்கு யாராவது அடித்தால் தனக்கு அடித்தது யார் என்பதைத் தேடும். யாரும் அடிக்கவில்லை எனக் கூறினாலும் அதன் அறிவு அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும். இன்னார் அடித்தார் எனக் கூறினால் அவரை அடிக்கும் வரை அழும்.

இப்பிரபஞ்சம் இல்லாமையிலிருந்து தோன்றியது. புதிதாகத் தோன்றிய அனைத்துக்கும் அதனை உருவாக்கிய ஒருவன் இருப்பது அவசியம் என்ற இந்த இரண்டு கூற்றுகளும் உண்மையானால் அதன் முடிவு இப்பிரபஞ்சம் உட்பட அனைத்தையும் படைத்த ஒருவன் இருக்க வேண்டும் என்பதேயாகும்.

இறைவிசுவாசிகள் இறைவனை ஏற்றுக்கொண்டிருப்பது இயல்புரீதியான நிருபிக்கப்பட்ட உண்மைகளின் விளைவாகவே. மறுக்கமுடியாத வாதங்கள் மற்றும் திட்டவட்டமான அறிவின் அடிப்படையில் உருவாகியதாகும். அறியாமையினால் ஏற்பட்ட நம்பிக்கையல்ல. மனிதர்களில் ஒரு சாராரின் விருப்பத்தின் அடிப்படையில் உருவாகியதுமல்ல. சில நாத்திகவாதிகள் சித்தரிப்பது போல் மாற்றுத்தரப்பினரால் இறைவன் இல்லை என்பதற்கு ஆதாரம் முன்வைக்க இயலாமையின் விளைவால் ஏற்பட்டதுமல்ல.

தொடரும் இன்ஷா அல்லாஹ்...◉

# அல்குர்ஆன் உருவாக்கிய சமுதாயம்

ஜைனப் காதர் சித்தீகிய்யா

அல்லாஹ்வின் கலாமாகிய குர்ஆன் பாடத்திட்டமாக, நபிகளார் ஆசிரியராக, சஹாபாக்கள், சஹாபிய பெண்மணிகள் மாணவ, மாணவியர்களாக நினைத்து பார்க்கையில் மனம் ஏங்குகிறது. நாளை மறுமையில் இவர்களின் அருகாமை கிடைக்க அல்லாஹ் நமக்கு அருள்புரிய வேண்டும்.

மனிதாபிமானம் அறவே அற்ற, அஞ்சானம் நிறைந்த, அற்ப விஷயங்களுக்காகத் தங்களுக்குள் ஆண்டுக் கணக்கில் சண்டையிட்டுக் கொண்டு தொடர் வன்முறை போர்களினால் சீர்குலைந்துபோயிருந்த அன்றைய அரபிய மக்களிடையே அன்பையும், அறப்போதனைகளையும் போதித்து, பரஸ்பரம் பாசப்பிணைப்பை ஏற்படுத்தியது அல்குர்ஆன் தான்.

கல்லையும், மண்ணையும், உண்ணும் உணவையும் கடவுளாக்கி இணைவைத்தல் என்ற மாபெரும் அநியாயத்தில் சிக்குண்டு, அறியாமையில் மூழ்கியிருந்தவர்களை

"நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை கற்பிக்கப்படுவதை மன்னிக்கமாட்டான். இதைத் தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்; யார் அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கிறாரோ, அவர் நிச்சயமாக மிகப்பெரும் பாவத்தை கற்பனை செய்துவிட்டார்" என்ற உபதேசத்தின் மூலம் ஒரே ஒரு இறைவனாகிய அல்லாஹ்வின் வல்லமைகளை எடுத்துரைக்கும் பகுத்தறிவாளர்களாக, அழைப்பாளர்களாக நடமாடச் செய்தது அல்குர்ஆன்.

உயிர் உடலை விட்டு பிரிந்து மண்ணறைக்குள் மறைந்ததன் பின்னால் எல்லாம் முடிந்துவிட்டது என்ற மமதையில் ஓடித் திரிந்தவர்களை

"(கியாமநாளுக்குரிய) அவ்வேளை நிச்சயமாக வரும்; இதில் சந்தேகமே இல்லை; மண்ணறைகளில் இருப்போரை நிச்சயமாக அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்புவான்" என மறுமை நாளின் சிந்தனையுடையவர்களாக மனித விவகாரங்களுக்குப் பொறுப்புள்ளவர்களாக வாழச் செய்தது அல்குர்ஆன்.



குலபேதம், நிறபேதம், மொழிபேதம், பிரதேச வாதம், பேசி இனவெறிப் போராட்டத்தில் ஈடுபட்டு பிரிந்து கிடந்தவர்களை சகோதர நேசர்களாக சமாதானத்தின் தூதுவர்களாக காட்சியளிக்கச் செய்தது அல்குர்ஆன்.

உயர்வு, தாழ்வு பேசி உயிர்களை மாய்த்துக் கொண்டு பல காலம் பலி பீடத்தில் பயணித்தவர்களை,

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், பெண்ணிலிருந்தே படைத்தோம்; பின்னர், நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும்பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; உங்களில் எவர் (அல்லாஹ்வை) மிகவும் அஞ்சுபவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில் நிச்சமாக கண்ணியமானவர் என்று உபதேசித்து கொள்கையில் உறுதியுள்ளர்வர்களாக பாசப்பிணைப்புள்ளவர்களாக உருவாக்கியது அல்குர்ஆன்.

**பெண் குழந்தைகளை இழிவாகக் கருதி உயிருடன் புதைத்து பெண்களின் உரிமைகளை உரித்தெடுத்து உல்லாச வாழ்க்கையில் திளைத்திருந்தவர்களை**

மதுவிலும், மாதுவிலும் மயங்கி பாவங்களில் குதூகலித்து அநாகரீகமாக ஆடிக் கொண்டிருந்தவர்களை

“நம்பிக்கை கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், சிலைகளும், குறிபார்க்கும் அம்புகளும் ஷைத்தானின் செயலிலுள்ள அருவருக்கத் தக்கவையாகும்; ஆகவே இவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால், நீங்கள் வெற்றியடைவீர்கள்” என்ற உபதேசத்தால் ஒழுக்கத்தின் சீலராக, நாகரீகத்தின் காவலர்களாக மாற்றியது அல்குர்ஆன்.

பெண் குழந்தைகளை இழிவாகக் கருதி உயிருடன் புதைத்து பெண்களின் உரிமைகளை உரித்தெடுத்து உல்லாச வாழ்க்கையில் திளைத்திருந்தவர்களை

உயிருடன் புதைக்கப்பட்ட பெண் குழந்தை, எந்தக் குற்றத்திற்காக அது கொல்லப்பட்டது? என்று வினவப்படும்” அந்த விசாரணை நாளை எச்சரித்து நற்பண்புகளுக்கு நற்செய்தி சொல்லக் கூடியவர்களாக மாற்றியது அல்குர்ஆன்.

இப்படி அல்குர்ஆன் ஏற்படுத்திய மாற்றங்கள் ஏராளம், ஏராளம்...

**அல்லாஹ்வின் கலாம் பாடத்திட்டமாக, உத்தம நபி ஆசிரியராக, சத்திய ஸஹாபாக்கள், ஸஹாபியாக்கள் மாணவ, மாணவியர்களாக உருவான சமுதாயம் உலகத்தின் முன்மாதிரியாக இன்றும் நிலைத்திருக்க, நாமும் உயர்ந்தோனாகிய அல்லாஹ்வின் அடிமை என்று சொல்வதில், எமது வேதம் அல்குர்ஆன் என்று சான்று பகர்வதில், எமது முன்மாதிரி நபிகளார் என்று உறுதி கூறுவதில், அல்லாஹ்வால் பொருந்தி கொள்ளப்பட்ட சத்திய ஸஹாபாக்களின் வழியே எமது வழி என உறுதி கொள்வதில் பெருமிதம் கொள்வோம்.**

உள்ளத்தை புரட்டுபவனே எனது உள்ளத்தை உனது மார்க்கத்தின் மீது நிலைபெறச் செய்வாயாக!

எங்கள் இறைவனே! நீ அருளிய (வேதத்)தை நாங்கள் நம்புகிறோம், (உன்னுடைய) இத்தூதரை நாங்கள் பின்பற்றுகிறோம். எனவே, எங்களை (சத்தியத்திற்கு) சாட்சி சொல்வோருடன் சேர்த்து எழுதுவாயாக.◉



# மலேசியாவில் சிறப்புடன் இயங்கி வரும் உணவகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஆட்கள் தேவை

1.சமையல்காரர்

2.புரோட்டா மாஸ்டர்,

3.தேநீர் மாஸ்டர்

4.தந்தூரி மாஸ்டர்,

5.வெய்ட்டர்

6.முடி திருத்துபவர் மற்றும்

தொழிற்சாலை பணியாளர்கள்

தகுந்த ஊதியம் வழங்கப்படும்
அனுபவம் உள்ளவர்களும்
அனுபவம் இல்லாதவர்களும்

**உடன் தொடர்பு கொள்ளவும்**

TAUFIQ MANPOWER CONSULTANTS (P) LTD

## TAUFIQ MANPOWER CONSULTANTS (P) LTD

30, THIRUVENGADAM STREET, PUDUPET, CHENNAI-600002.

044 - 28513303, 28593303, 28419682, 28546050, 28592143
FAX: 044 – 28412726

## சென்னையில் வெளியூர் வாசிகள் தங்குவதற்கு

சென்னை எழும்பூர் இரயில் நிலையம் எதிரில் குடும்பத்துடன்
பாதுகாப்பாக தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன்
A/C - Non A/C ரூம்கள் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்புக்கு: **Taufiq inn Guest House,**
#5, Gandhi Irwin Road, Egmore, Chennai - 600 008.
(Near KPN Travels) 044 28193303, 28193033

# ஹதீஸ்கள் தொகுக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட வரலாறு - 3

மௌலவி யூசுஃப் ஃபைஸி
இஸ்லாமிய அழைப்பாளர்

**ஸலஃபுகளின் சொற்களிலும் செயல்களிலும் சுன்னா.**

நபித்தோழர்களும் அதற்கு அடுத்து வந்தவர்களும் நபியவர்களின் ஏவல்களையும் விலக்கல்களையும் பின்பற்றி வந்துள்ளனர். மேலும் நபியவர்களுக்கென உரித்தான செயல்களைத் தவிர நபியவர்களின் மற்ற சுன்னாக்களை தங்களுடைய வணக்க வழிபாடுகளிலும் கொடுக்கல் வாங்கல்களிலும் பின்பற்றிவந்துள்ளார்கள். அது போன்று நபியவர்கள் எதை செய்தாலும் காரணம் கேட்காமல் நபியவர்கள் செய்தால் நபித்தோழர்களும் செய்தார்கள். நபியவர்கள் ஒரு காரியத்தை விட்டால் அதை நபித்தோழர்கள் விட்டார்கள்.

**இதற்கு எடுத்துக்காட்டாக சில செய்திகளை பார்க்கலாம்.**

அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபியவர்கள் தங்கத்தில் செய்யப்பட்ட மோதிரம் ஒன்றை செய்து அதை அணிந்தார்கள். மக்களும் தங்கத்தில் செய்யப்பட்ட மோதிரத்தை அணிந்தார்கள். பிறகு நபியவர்கள் இதை இனி ஒரு போதும் அணியமாட்டேன் என்று சொல்லி அதை கழற்றி எறிந்தார்கள். மக்களும் அதை கழற்றி எறிந்தார்கள்.

நூல் : புகாரி 7298

நபியவர்கள் தங்க மோதிரத்தை அணிந்தபோதும் மக்கள் அதற்கான காரணத்தை கேட்காமல் அணிந்தார்கள். அதை கழற்றி எறிந்த போதும் அதற்கான காரணத்தை கேட்கவில்லை. இது போன்று வரும் மற்றொரு செய்தியையும் பாருங்கள்.

அபூஸயீத் அல் குத்ரீ (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், "நபியவர்கள் தன்னுடைய தோழர்களோடு தொழுகை நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய செருப்பை கழற்றி அதை தன்னுடைய இடது புறம் வைத்தார்கள். இதைப் பார்த்த நபித்தோழர்களும் தங்களுடைய செருப்புகளை கழற்றினார்கள். நபியவர்கள் தொழுகையை முடித்தபோது உங்களுடைய செருப்புகளை ஏன் கழற்றினீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நபித்தோழர்கள் நீங்கள் கழற்றியதை பார்த்தோம் நாங்களும் கழற்றினோம் என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் என்னிடம் வந்து உம்முடைய செருப்பில் அசுத்தம் இருக்கிறது என்று சொன்னார்கள் அதனால் நான் கழற்றினேன் என்றார்கள்.

நூல் : அபூதாவூத் 650

மேலும் நபித்தோழர்கள் நபியவர்களின் சுன்னாக்களை பின்பற்றுவதிலும் அதை கேட்பதிலும் மிக ஆர்வமுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை பின்வரும் செய்தி நமக்கு அறிவிக்கின்றது.

உமர் (ரழி) அவர்கள் கூறியதாவது :

நானும் அன்சாரிகளில் ஒருவரான

என் அண்டை வீட்டுக்காரரும் பனூஉமய்யா பின் ஸைத் குலத்தாரின் குடியிருப்பில் வசித்தோம். அது மதீனாவின் மேடான கிராமப் பகுதிகளில் ஒன்றாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் (அன்னாரின் அவைக்கு) நாங்கள் (இருவரும்) முறைவைத்துச் சென்றுகொண்டிருந்தோம். அவர் ஒருநாள் செல்வார்; நான் ஒருநாள் செல்வேன். நான் சென்றால் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனிடமிருந்து அறிவிக்கப்பட்ட செய்தி மற்றும் ஏனைய செய்திகள் முழுவதையும் அவருக்காகக் கொண்டு வந்து (அவரிடம் அறிவித்து) விடுவேன். அது போன்று அவர் சென்றுவரும்போதும் அவ்வாறே செய்வார். (ஹதீஸ் சுருக்கம்) நூல் : புகாரி 89

நபித்தோழர்கள் வியாபாரத்திற்காக அல்லது வேறு விஷயத்திற்காக வெளியூர் செல்லும் போது நபியவர்கள் சொல்லும் செய்திகள் தனக்கு கிடைக்காமல் போய்விடக்கூடாது என்பதை பயந்து அதற்காக முறைமை வைத்து நபியவர்களின் சுன்னாக்களை கேட்டு படித்து அதை நடைமுறைப்படுத்தினார்கள் என்பதை இதிலிருந்து நாம் அறியமுடிகிறது.

நபியவர்களோடு இருந்தவர்கள் மட்டும் நபியவர்களை பின்பற்றவில்லை. மாறாக மதினாவின் சுற்றுப்பகுதியில் இருந்தவர்களும் நபியவர்களின் சுன்னாக்களை நபியவர்கள் வழங்கும் தீர்ப்புகளை நபியவர்கள் சொல்லும் மார்க்கச் சட்டங்களை அறிவதற்காக ஆட்களை அனுப்பி அதை தெரிந்து கொண்டு செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை பல செய்திகள் மூலம் நாம் அறியமுடிகிறது.

அது போன்று பெண்களும் அவர்களுக்கான தனிப்பட்ட சட்டங்களை அறிந்து கொள்வதற்காக நபியவர்களின் மனைவிமார்களிடம் சென்று நபியவர்கள் சொன்ன மார்க்கச் சட்டங்களை கேட்டு படித்து அதை நடைமுறைப் படுத்தியிருக்கிறார்கள்.

இந்த செய்திகளெல்லாம் நபித்தோழர்கள் சுன்னாவை பின்பற்றுவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள். நபியவர்களின் சுன்னாக்களுக்கு எப்படி முழுமையாக கட்டுப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. நபித்தோழர்கள் ஏதோ நபியவர்களின் சுன்னாக்களை நபி(ஸல்) அவர்கள் உயிரோடு இருக்கும் போது பின்பற்றினார்கள் என்று சொல்லமுடியாது. நபியவர்களின் மரணத்திற்குப்பிறகும் நபித்தோழர்கள் நபியவர்களின் சுன்னாக்களையே பின்பற்றினார்கள் என்பதற்கு சில செய்திகள் இருக்கிறது. அதை பார்ப்போம்.

அபூபக்கர் (ரலி) அவர்கள் பாத்திமா(ரலி) அவர்களின் பிரச்சனைகளின் போது கூறினார்கள் "அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் செய்து கொண்டிருந்த எதனையும் நான் செய்யாமல் விட மாட்டேன். ஏனெனில், அவர்களுடைய செயல்களில் எதனையாவது நான் விட்டு விட்டால் நான் வழிதவறி விடுவேனோ என்று அஞ்சுகிறேன்" என்று சொன்னார்கள். (ஹதீஸ் சுருக்கம்)

நூல் : புகாரி 3093

உமர் (ரழி) அவர்கள் காழி ஷீரைஹ் பின் ஹாரிஸ் அல் கின்தீ (மரணம் ஹிஜ்ரி 78) அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அல்லாஹ்வுடைய வேதத்தில் உள்ளதின் பிரகாரம் தீர்ப்பு செய். அல்லாஹ்வின் வேதத்தில் தீர்ப்பு இல்லையென்றால் நபியவர்களின் சுன்னாக்களைக் கொண்டு தீர்ப்பு செய். வேதத்திலும் சுன்னாவிலும் இல்லாதபோது நல்லவர்கள் தீர்ப்பளித்ததைக் கொண்டு தீர்ப்பு செய். அல்லாஹ்வின் வேதத்திலும் நபியவர்களின் சுன்னாவிலும் நல்லவர்களின் தீர்ப்பிலும் கிடைக்காத போது நீ விரும்பினால் (சுய ஆய்வின் படி தீர்ப்பளிப்பதற்கு முந்திச்) செல். நீ

விரும்பினால் (சுய ஆய்வின் படி தீர்ப்பளிப்பதற்கு) ஒதுங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் ஒதுங்கிக் கொள்வதையே நன்மை என கருதுகிறேன். அஸ்ஸலாமு அலைக்கும்.

நூல் : சுனன் நஸாயி 5401

இது போன்று நிறைய ஆதாரங்கள் இருக்கிறது. உதாரணத்திற்காக சிலதை சொல்லியிருக்கிறோம். இது போன்று நபித்தோழர்களை பின்பற்றிய தாபிஈன்களும் நபியவர்களின் சுன்னாக்களை தேடுவதிலும் அதை படிப்பதிலும் படித்துக் கொடுப்பதிலும் அதை பின்பற்றுவதிலும் ஆர்வமிக்கவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கும் நிறைய ஆதாரங்கள் உள்ளன.

இமாம் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் (மரணம் ஹிஜ்ரி 110) அறிவிக்கிறார்கள். இம்ரான் பின் ஹுஸைன்(ரழி) அவர்கள் ஒரு அவையில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடன் அவர்களின் தோழர்களும் அமர்ந்திருந்தார்கள். அப்போது கூட்டத்தில் இருந்த ஒருவர் குர்ஆனைத் தவிர வேறு எதனையும் எங்களுக்கு அறிவிக்காதீர்கள் என்றார். அவரை நீ எனது அருகாமைக்கு வா என்றார்கள். அவர் நெருங்கி வந்தார். அவரைப் பார்த்து நீயும் உன்னுடைய தோழர்களும் குர்ஆன் மட்டும் போதும் என்று சொன்னால் நீங்கள் குர்ஆனில் லுஹர் நான்கு ரக்அத்கள் என்றும் அஸர் நான்கு ரக்அத்கள் என்றும் மக்ரிப் மூன்று ரக்அத்கள் என்றும் அதில் முதல் இரண்டு ரக்அத்களில் (எதை) ஓத வேண்டும் என்று குர்ஆனில் கண்டிருக்கிறீர்களா? நீயும் உன்னுடைய தோழர்களும் குர்ஆன் மட்டும் போதும் என்று சொல்வீர்கள் என்றால் தவாஃப் ஏழு சுற்றுக்கள் என்றும் ஸஃபா மர்வாவை சுற்றிவருவது குறித்தும் பார்த்திருக்கிறீர்களா? என்று கேட்டுவிட்டு இம்ரான் பின் ஹுஸைன் (ரழி) அவர்கள் மக்களைப்பார்த்து மக்களே எங்களிடமிருந்து (குர்ஆனையும் சுன்னாவையும்) எடுத்துக்கொள்ளுங்கள். அப்படி நீங்கள் செய்யவில்லையெனில் நீங்கள் நிச்சயமாக வழிதவறிவிடுவீர்கள்.

நூற்கள் : இமாம் பைஹகி (ரஹ்) அவர்களின் மத்கலுத் தலாயில் பாகம் 1 பக்கம் 25, இமாம் கதீப் பக்தாதி (ரஹ்) அவர்களின் அல்கிஃபாயா ஃபீ இல்மிர் ரிவாயா பக்கம் 48 இமாம் இப்னு அப்தில் பர்(ரஹ்) அவர்களின் ஜாமிவு பயானில் இல்மி வ ஃபழ்ஹி பாகம் 2 பக்கம் 191.

இமாம் அய்யூப் அஸ்ஸிக்தியானி(ரஹ்) (மரணம் 131) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நீ ஒருவருக்கு சுன்னாவை அறிவித்துக் கொண்டிருக்கும் போது அதற்கு அவர் சுன்னாவை அறிவிப்பதை விடு. குர்ஆனிலிருந்து எங்களுக்கு அறிவியுங்கள் என்று சொன்னால் நீ அறிந்து கொள் அவர் ஒரு வழிகேடர் வழிகெடுக்ககூடியவர்.

நூல் : அல்கிஃபாயா பக்கம் 16

இமாம் அபூஅம்ரு அப்துர் ரஹ்மான் அல்அவ்ஸாயீ (ரஹ்) (மரணம் 157) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். குர்ஆன் சுன்னாவின் பால் மிக தேவையுள்ளதாக இருக்கிறது. சுன்னா குர்ஆன் பால் மிகத் தேவையுள்ளதாக இருக்கிறது.

நூல் : ஜாமிவு பயானில் இல்மி வ ஃபழ்ஹி பாகம் 2 பக்கம் 332

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) (மரணம் 241) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நிச்சயமாக சுன்னா, குர்ஆனை விளக்குகிறது அதை தெளிவுபடுத்துகிறது.

நூல் : ஜாமிவு பயானில் இல்மி வ ஃபழ்ஹி பாகம் 2 பக்கம் 333

இது போன்று பல அறிஞர்களின் கருத்துக்கள் பல நூற்களில் இடம் பெற்றிருக்கிறது. அந்த அறிஞர்களின் கருத்துக்கள் அனைத்தும் சுன்னா - மார்க்க ஆதாரம்தான் என்றும் குர்ஆனைப் போன்று மார்க்கச் சட்டங்களை தீர்மானிக்கும் என்றும் நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...◉



# அல்லாஹ்வால் நினைவுகூரப்படுவோம்!

- செல்லத்தாய்

அல்ஹம்துலில்லாஹ்! நம்மை கொடிய நோய்களில் இருந்து பாதுகாத்து பரிபாலிக்கும் எல்லாம் வல்ல ஏக இறைவனுக்கே புகழ் அனைத்தும்..

"அல்லாஹ்வை நினைவு கூருதல் மிகப்பெரிய (நன்மை) ஆகும்".

அல்குர்ஆன்: 29:45

"என்னை நீங்கள் நினைவு கூருங்கள்; நான் உங்களை நினைவு கூருவேன்"

அல்குர்ஆன்: 2:152

"நீங்கள் வெற்றி பெறுவதற்காக அதிகமாக அல்லாஹ்வை நினைவு கூருங்கள்".

அல்குர்ஆன்: 62:10

தொழுகை, ஸகாத், நோன்பு, குர்ஆன் ஓதுதல், தஸ்பீஹ், தக்பீர் கூறுதல் போன்ற எல்லா அமல்களும் திக்ர் நினைவு கூருதலிலே (அல்லாஹ்வை) அடங்கும்.

அல்லாஹ் தன்னை தொழுகையின் மூலம் நினைவு கூருமாறு தன் திருமறையில் கூறுகிறான்.

என்னை தியானிக்கும் பொருட்டு தொழுகையை நிலை நிறுத்துவீராக!

(அல்குர்ஆன் 20:14)

"இறைவிசுவாசிகளே அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருங்கள் காலையிலும் மாலையிலும் அவனை துதி செய்யுங்கள்"

(அல்குர்ஆன் 33:41,42)

இந்த உலகத்தில் அல்லாஹ் தன்னை துதிப்பதையே 'நினைவு கூருதல்' என்று கூறுகிறான். இறை விசுவாசிகளின் பண்பாக அது இருப்பதையும் இதிலிருந்து விளங்க முடிகிறது.

மிகப்பெரிய நன்மையாகவும், பாவங்களை அழிக்க கூடிய, மன அமைதி அளிக்கக் கூடிய இச்சிறந்த அமலை செய்ய நம்மில் பலருக்கு பொறுமை இருப்பதில்லை. நம்மில் வயதானவர் பலர் தஸ்பீஹ் மணியை எந்நேரமும் கையில் வைத்துக்கொண்டு துதித்துக் கொண்டு இருப்பதை பார்த்திருப்போம்.. நம்மில் தஸ்பீஹ் மணியை பயன்படுத்தும் பழக்கம் இன்று குறைந்து விட்டது நன்று! கை விரலைக் கொண்டு தஸ்பீஹ் செய்வதே சுன்னத்தாகும். இருப்பினும் அத்துடன் சேர்த்து தஸ்பீஹ் செய்யும் பழக்கமும் அல்லவா குறைந்து வருகிறது! அல்லாஹ் பாதுகாப்பானாக!

'சுப்ஹானல்லாஹ்' அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன் என்று கூறுவது தஸ்பீஹ் ஆகும். மனிதர்களுக்கு மாறாக அல்லாஹ் தூய்மை மிக்கவன் என்று மனப்பூர்வமாக புகழ்வதாகும்.

"ஒருவன் நூறு முறை தஸ்பீஹ் செய்வதால் ஆயிரம் நன்மைகளைப் பெற்று விடுகிறான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்லிம் 5230)

'அல்ஹம்துலில்லாஹ்' எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே என்று கூறுவதே தஹ்மீத் ஆகும். மனிதர்களின் மூலமோ பிறவற்றின் மூலமோ தனக்கும் இவ்வுலகிற்கும் அருள் புரிந்து கொண்டிருக்கும் அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் சொந்தமாகும் என்று பொருள்படும்.

'அல்லாஹு அக்பர்'அல்லாஹ் மிகப் பெரியவன் என்று கூறுவதே தக்பீர் ஆகும். இவ்வுலகிலும் விண்ணுலகிலும் அல்லாஹ்வை விட உயர்ந்தது எதுவுமில்லை என்பதாகும்.

இம்மூன்றும் கடமையான தொழுகைகளுக்குப் பிறகு 33 தடவை கூறப்பட வேண்டியவையாகும் என்று ஹதீஸ்களில் காணப்படுகிறது.

ஏழைகள் நபி(ஸல்) அவர்களிடம் வந்து வசதியானவர்கள் உயர்வான தகுதிகளையும் நிலையான அருட்கொடைகளையும் பெற்றுக் கொண்டனர். நாங்கள் தொழுவது போலவே அவர்களும் தொழுகிறார்கள். நாங்கள் நோன்பு வைப்பது போலவே அவர்களும் நோன்பு வைக்கிறார்கள். (ஆனால்) அவர்களுக்கு செல்வம் அதிகம் உண்டு. (இதனால்) ஹஜ், உம்ரா, ஜிஹாத் செய்கின்றனர். தர்மம் கொடுக்கின்றனர். (எங்களுக்கு அவ்வாறு செய்ய முடியவில்லையே!') என்று கூறினார்கள். "நீங்கள் செய்வதுபோல் செய்கின்றவரை தவிர வேறு எவரும் உங்களை விட சிறந்தவராக ஆக முடியாது" என்று கூறிவிட்டு அது என்னவெனில், நீங்கள் 33 தடவை 'சுபஹானல்லாஹ்' 33 தடவை' அல்ஹம்துலில்லாஹ்' 33 தடவை'அல்லாஹு அக்பர்'கூறுங்கள் என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள். (புகாரி 843)

இவ்வாறு கூறுவது தர்மத்திற்கு ஈடான செயலாக உள்ளது என்பதை விளங்க முடிகிறது. ஒருவர் படுக்கைக்கு வந்தால் இவ்வாறு செய்யுமாறு நபி (ஸல்) அவர்கள் பணித்தார்கள். (புகாரி 5361)

"இரண்டு வார்த்தைகள் நாவிற்கு எளிதானதாகவும், மீசான் தராசில் கனமானதாகவும், இறைவனுக்கு மிக விருப்பமானதாகவும் உள்ளன. அவை "சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி" (அல்லாஹ்வை புகழ்வதுடன் அவன் தூய்மையானவன் என போற்றுகிறேன்) "சுபஹானல்லாஹில் அளீம்' (மகத்தான அல்லாஹ் தூய்மையானவன் என போற்றுகிறேன்) என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள். ( புகாரி 7563)

"சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்று ஒரு நாளில் ஒருவர் நூறு தடவை கூறினால் அவரின் குற்றங்கள் கடல் நுரையளவு இருந்தாலும் மன்னிக்கப்படும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ( புகாரி 6405)

மேலும் இந்த திக்ரு அல்லாஹ்வுக்கு விருப்பமானதாகவும் இருக்கிறது என்றும் இதைக் கூறுபவருக்கு சொர்க்கத்தில் ஒரு பேரீத்த மரம் நடப்படும் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (திர்மிதி)

"திக்ரில் சிறந்தது 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்பதாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்கள். (திர்மிதி 3383)

இவ்வாறு பல திக்ருகளும் அதன் சிறப்புகளும் ஹதீஸ்களில் காணப்படுகின்றன.

நபி(ஸல்) அவர்கள் எல்லா நேரங்களிலும் அல்லாஹ்வை நினைவுகூருபவர்களாகவே இருந்தார்கள் என ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்.

"(நபியே) காலையிலும் மாலையிலும் பணிவாக, அமைதியாக, உரத்த சப்தமின்றி உம் மனதிற்குள்ளே உம் இறைவனை நினைவு கூருவீராக! பொடுபோக்காளர்களில் ஒருவராக நீர் ஆகி விடாதீர்" (அல்குர்ஆன்: 7:205) என்று அல்லாஹ் திக்ரு செய்யும் முறையை தெளிவாக கூறுகிறான்.

"தன் இறைவனை நினைவு கூருபவனுக்கும், அவனை நினைவு கூராதவனுக்கும் உதாரணம் உயிர் உள்ளவர், மரணித்தவர் போன்றதாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள். (புகாரி 6407)

இலகுவான முறையில் அதிகம் நன்மையை கொள்ளையடிக்க வழிவகுக்கும் திக்ருகள் நாம் அன்றாடம் செய்ய வேண்டிய அமலாகும். நம்மையும் நம் உள்ளத்தையும் உயிரோட்டம் உள்ளதாக ஆக்கி வெற்றி பெறுவோமாக.. ஆமீன்!◉




# வெற்றி பெற்றோர் யார்?-3

## வேதங்களை நம்பியோர்!

**ஃபாத்திமா ஆலிமா மஹ்மூதிய்யா,**
**சுரண்டை**

ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே! நீ ஏன் படித்தோம் என்பதனை மறந்து விடாதே! வாழ்க்கை நெறி தவறி நடந்து விடாதே! நீ மறுமை வாழ்வு உண்டு என்பதை மறந்துவிடாதே! இறை கூறும் வார்த்தைகளை மீறக் கூடாது, நீ அதை (வேதம்) இசைவுடன் ஏற்று நடந்தால் உனக்கு வெற்றி நிச்சயம்!

ஒருவனின் செல்வமோ, செல்வாக்கோ, உடல் உழைப்போ மட்டும் அவனை செம்மைப்படுத்தி சிறந்த மனிதனாக செயல்பட வழி வகுக்காது. அப்படியே அவனுக்கு அது பலன் தரக்கூடியதாக இருந்தால் அது இவ்வுலகில் மட்டும்தான்!. மாறாக மறுமைக்கு பயன் தரக்கூடியது அல்ல! மனிதன் மனிதனாக வாழவும் அவன் மறுமையில் ஈடேற்றமும் வெற்றியும் பெறுவதற்காகவும்தான் அல்லாஹ் தன் வேதங்களை இறக்கினான். அதனடிப்படையில் இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கை நெறி அறிந்து திட்டமிட்டு செயல்பட வேண்டும். ஏனெனில் "திட்டம் இல்லா வாழ்க்கை நட்டத்திலே" என்பதுபோல.. நாம் நம் வாழ்வினை இறை கூற்றின் அடிப்படையில் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். அவ்வாறு நாம் நமக்கு அனுப்பப்பட்ட வேதத்தையும் நமக்கு முன்னால் அனுப்பப்பட்ட வேதங்களையும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவ்வாறு நம்பிக்கை கொண்டவர்கள் வெற்றி பெற்றோர்.

" உமக்கு அருளப்பட்ட வேதத்தின் மீதும் உமக்கு முன்னர் அருளப்பட்டவை மீதும் நம்பிக்கை கொள்வார்கள். இன்னும் மறுமையை உறுதியாக நம்புவார்கள். இவர்கள் தாம் தங்கள் இறைவனின் நேர்வழியில் இருப்பவர்கள் மேலும் இவர்களே வெற்றியாளர்கள்". (அல்குர்ஆன் **2:45**) என அல்லாஹ் கூறுகிறான்.

ஈமானின் கடமைகளில் ஒன்றான வேதங்களை நம்புவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும். அதன் அடிப்படையிலே மனிதன் செயல்பட வேண்டும்.

இவ்வுலகில் லட்சக்கணக்கான நபிமார்களை வழிகாட்டியாக அல்லாஹ் அனுப்பினான். அவர்கள் அனைவரும் தன் மனதில் உள்ள கருத்துக்களையோ, அல்லது தன் சுய, விருப்பு வெறுப்புகளையோ, தனக்கு சாதகமானதையோ மக்களிடம் பரப்பவில்லை. மாறாக தம்மை தூதராக தேர்ந்தெடுத்த அல்லாஹ்வின் கட்டளைகளையே மக்களிடம் போதித்தனர். முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்கள் முதல் நம் இறுதி தூதராம் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் வரை இறைவன் தமக்கு இட்ட கட்டளையையே தம் மக்களுக்கு எடுத்துரைத்தார்கள் அவ்வழியில் வாழ்ந்தும் காட்டினார்கள்.

இறைக் கட்டளைகள் தான் நபிமார்களுக்கு வேதங்களாக அனுப்பப்பட்டது. தாவூத் நபிக்கு சபூர் எனும்

வேதமும், மூஸா (அலை) அவர்களுக்கு தவ்ராத் எனும் வேதமும், ஈஸா (அலை) அவர்களுக்கு இன்ஜில் எனும் வேதமும், இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு ஒட்டுமொத்த உலக மக்கள் அனைவருக்குமான இறுதி வேதமாகிய புனித திருமறை குர்ஆன் அருளப்பட்டது. இவ்வேதங்களை நம்புவது ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் கடமையாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

"கல்வியில் உறுதி உடையோரும் நம்பிக்கை கொண்டோரும் உமக்கு அருளப்பட்ட இவ்வேதத்தின் மீதும் உமக்கு முன்னர் அருளப்பட்ட வேதத்தின் மீதும் நம்பிக்கை கொள்கிறார்கள்"

(அல்குர்ஆன் 4:162)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

"அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத நபியாகிய நம் தூதரை பின்பற்றுகிறார்கள்.. அவர்கள் தங்களிடம் உள்ள தவ்ராத்திலும் இஞ்சீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதை காண்பார்கள். அவர் நன்மையை ஏவுவார். இன்னும் தீமையை விட்டும் அவர்களை அவர் விலக்குவார். தூய்மையானவற்றை அவர்களுக்கு ஆகுமாக்குவார். கெட்டவற்றை அவர்களுக்கு தடுத்து விடுவார். இன்னும் அவர்களை விட்டு அவர்களுடைய சுமைகளையும் அவர்கள் மீது இருந்த விலங்குகளையும் இறக்கி விடுவார் எனவே எவர்கள் அவரை நம்பி அவரை கண்ணியப்படுத்தி அவருக்கு உதவி செய்து அவருடன் அருளப்பட்ட ஒளியையும் பின்பற்றுகிறார்களோ அவர்கள்தான் வெற்றியாளர்கள்.

(அல்குர்ஆன் 7:157)

மேற்கண்ட வசனங்களில் கூறியது போல், தான் இறக்கி அருளிய வேதங்களில் மக்களின் வாழ்க்கை நெறிகளையும் வரம்புகளையும் அல்லாஹ் மனிதனுக்கு வகுத்துள்ளான். அதனடிப்படையில் நபிமார்கள் போதித்தவற்றை கேட்டு தங்கள் வாழ்வில் செயல்பட்டவர்கள், கட்டுப்பட்டவர்கள் ஈடேற்றம் பெற்றனர்; அந்த வரம்புகளை மீறியவர்கள் தண்டிக்கப்பட்டனர், அழிக்கப்பட்டனர்.. என்பதனை இறுதி வேதமான திருக்குர்ஆனிலேயே முந்தைய சமுதாய வரலாறுகளில் காண்கிறோம்.

முந்தைய சமுதாயத்தில் உள்ளவர்களோ இறை வேதத்துடன் தம் எண்ணங்களையும், செயல்பாடுகளையும் ஒன்றிணைத்து சில இறைக்கூற்றுகளை மறைத்து, திரித்து இது இறை வேதம் என்று கூறினார்கள்.

எல்லாத் தூதர்களும் ஓர் இறைக் கொள்கையை தான் போதித்து தான் இறைவனின் தூதர் என்றும் கூறினார்கள். அதனை முந்தைய வேதங்களில் நாம் காணமுடிகிறது.

தீர்க்கதரிசியாக எலியா வந்து இப்ராஹிமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும் நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும் நான் இந்த காரியங்களை எல்லாம் உம்முடைய வார்த்தைகளின் படி செய்தேன் என்றும் இன்றைக்கும் விளங்கப்பன்னும்.

(இராஜாக்கள் 18: 36)

ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.

(யோவான் 17: 3)

மேலும் அவர்களும் இறைவனையே வணங்கினர். அபிரகாமும் முகம்குப்புற விழுந்து வணங்கினார்.

( ஆதியாகமம் 17: 3)

மோசேயும் ஆரோதும் சபையோரை விட்டு ஆசரிப்புக் கூடாரவாசலில் போய் முகங்குப்புற விழுந்தார்.(எண்ணாகமம் 20: 6)

இயேசு முகம் குப்புற விழுந்து ஜெபம் பண்ணினார். (மத்தேயு 26:39)

இவ்வாறு இறை வசனங்களாக இறைவன் அருளிய முந்தைய வேதங்களில் இருந்தாலும் மனிதர்கள் தங்கள் சுய விருப்பங்களையும் அதிலே சேர்த்து இறைவனின் வேதம் என்று கூறி மக்களை வழி கெடுத்தனர்.

உதாரணமாக யூதர்கள் உசைர்(அலை) அவர்கள் அல்லாஹ்வின் புதல்வர் என்றார்கள். கிறித்தவர்களோ இறைத்தூதர் ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் புதல்வர் என்றார்கள். இணைவைப்பாளர்கள் வானவர்களை அல்லாஹ்வின் புதல்விகள் என்றார்கள்.

இதற்கு மறுப்பாக அல்லாஹ் கூறுகிறான்.."இன்னும் கூறுகிறார்கள் அல்லாஹ் ஒரு குமாரனை ஏற்படுத்திக் கொண்டான் என்று (இவர்கள் கூறுவதிலிருந்து) அவன் மிகத் தூய்மையானவன்". (அல்குர்ஆன் 2:116)

"அவன் எவரையும் பெறவுமில்லை யாராலும் பெறப்படவுமில்லை அன்றியும் அவனுக்கு நிகராக யாருமில்லை!"

(அல்குர்ஆன் 112:3,4)

மேலும் இறைத்தூதர் ஈஸா (அலை) அவர்கள் கொல்லப்பட்டதாக பைபிளில் புதிய ஏற்பாட்டில் (லூக்கா23: 46 )எழுதி வைத்துள்ளார்கள். இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான் ஈஸா அலை அவர்களை அவர்கள் கொல்லவுமில்லை; அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை.

(அல்குர்ஆன் 4:157)

அல்லாஹ் அவரைத் தன்னளவில் உயர்த்திக் கொண்டான். (அல்குர்ஆன்4: 158)

எனவே வேதக்காரர்களான ஆன யூதர்களும் கிறித்தவர்களும் குர்ஆன் ஹதீசுக்கு மாற்றமாக கூறும் கூற்றுக்களை ஏற்கக்கூடாது. மாறாக அல்லாஹ் அருளிய வேதங்கள் அனைத்தையும் நாங்கள் நம்புகிறோம் என்று கூறிவிட வேண்டும்.

வேதக்காரர்கள் ஆன யூதர்கள் தவ்ராத்தை ஹிப்ரு மொழியில் ஓதி அதை இஸ்லாமியர்களுக்கு அரபி மொழியில் விளக்கம் கொடுத்து வந்தார்கள்.அப்போது அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் வேதக்காரர்களையும் அவர்கள் சொல்வதையும் உண்மை என நம்ப வேண்டாம்; பொய் என மறுக்க வேண்டாம். மாறாக நீங்கள் சொல்லுங்கள்: 'நாங்கள் அல்லாஹ்வையும் எங்களுக்கு அருளப்பட்டதையும் மற்றும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் இன்னும் இவர்களின் சந்ததியினர் மீது அருளப்பட்டதையும் மற்றும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் அருளப்பட்டதையும் இதர அனைத்து இறைத்தூதர்களும் தங்களுடைய இரட்சகனிடமிருந்து அருளப்பட்டதையும் நாங்கள் நம்புகிறோம். அவர்களில் எவர்களுக்கு இடையிலும் பாகுபாடு காட்ட மாட்டோம். நாங்கள் அல்லாஹ்வுக்கே அடிபணிபவர்களாக இருக்கிறோம் என்று கூறுங்கள்" (2:136) வசனத்தை எங்களுக்கு கூறினார்கள் என அபூ ஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(நூல்: புகாரி4485)

இவ்வாறு மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் அனைத்தையும் உண்மை படுத்துவதாக நம் திருமறைக்குர்ஆன் இருக்கின்றது.மேலும் திருமறை குர்ஆன் வெறும் அரபி மொழியில் ஓதுவதற்கு மட்டும் அல்ல மாறாக அதனை படித்து செயல்படுத்துவதற்குமே ஆகும். மேலும் இது முந்தைய வேதத்தினை மெய்ப்படுத்தக் கூடியதாக இருக்கிறது படிப்பினைகளும் இருக்கிறது.

நாம் உங்களை ஒரு நடுநிலை உள்ள சமுதாயமாக ஆக்கியுள்ளோம். நீங்கள் மற்ற மனிதர்களுக்கு சாட்சியாளர் களாகவும்

இறைத்தூதர் உங்களுக்கு சாட்சியாக இருப்பதற்காக ஆகும். (அல்குர்ஆன் 2:143)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்' 'மறுமை நாளில் (நபி) நூஹ் (அலை) அவர்கள் அழைக்கப்படுவார்கள். அவர்கள், 'இதோ வந்துவிட்டேன்; என் இறைவா! கட்டளையிடு; காத்திருக்கிறேன்' என்று பதிலளிப்பார்கள். அப்போது அவர்களிடம், '(நம்முடைய செய்தியை மக்களுக்கு) நீங்கள் எடுத்துரைத்து விட்டீர்களா? என்று இறைவன் கேட்பான். அவர்கள், 'ஆம் (எடுத்துரைத்து விட்டேன்)' என்று சொல்வார்கள். அப்போது அவர்களின் சமுதாயத்தாரிடம், 'உங்களுக்கு இவர் (நம் செய்தியை) எடுத்துரைத்தாரா?' என்று கேட்கப்படும். அதற்கு அவர்கள், 'எங்களிடம் எச்சரிப்பவர் எவரும் வரவில்லை' என்று சொல்வார்கள். அப்போது அல்லாஹ், 'உங்களுக்கு சாட்சியம் சொல்கிறவர் யார்? என்று (நூஹிடம்) கேட்க அவர்கள், 'முஹம்மதும் அவரின் சமுதாயத்தினரும்' என்று பதிலளிப்பார்கள். அவ்வாறே அவர்களும், 'நூஹ் (அலை) அவர்கள் (தம் சமுதாயத்தாருக்கு இறைச்செய்தியை) எடுத்துரைத்துவிட்டார்கள்' என்று சாட்சியம் அளிப்பார்கள். மேலும், இறைத்தூதர் உங்களுக்கு சாட்சியாக இருப்பார். இதையே 'இவ்வாறே, உங்களை நாம் நடுநிலையான சமுதாயமாக ஆக்கினோம். நீங்கள் மக்களுக்குச் சான்று வழங்குபவர்களாகவும், இறைத்தூதர் உங்களுக்குச் சான்று வழங்குபவராகவும் திகழ்ந்திட வேண்டும் என்பதற்காக' எனும் (திருக்குர்ஆன் 2:143) இறைவசனம் குறிக்கிறது. 'நடுநிலையான' (வசத்) என்பதற்கு 'நீதியான' என்று பொருள்.

என அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவித்தார்.

ஸஹீஹ் புகாரி : 4487.

அதுமட்டுமல்லாது திருமறை குர்ஆனில் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை, மண்ணறை முதல் மறுமை வரை, நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம், அறிவியல், அரசியல், ஆன்மிகம், பொருளாதாரம், சமூகம், கணிதம், வானம், பூமி, உயிரியல், நிதி, நீதி, நிர்வாகம், நன்மை, தீமை, குற்றவியல், தண்டனைகள், இறைநம்பிக்கை, இறைமறுப்பு, சொர்க்கம், நரகம், ஒழுக்கம், உறவுமுறை என்று மனிதனுக்கு தேவையான அத்துணை வழிகாட்டுதல்களையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது.

மேலும் இக்குர்ஆன் அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து கற்பனை செய்யப்பட்டதன்று. (அல்குர்ஆன் 10:37)

இவ்வசனங்களை நம்பாமல் பொய்ப்பித்தவர்களுக்கு அழிவுதான் என்றும் பல இடங்களில் அல்லாஹ் கூறுகிறான்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'

மறுமை நாளில் உடல் பருத்த கொழுத்த மனிதன் ஒருவன் வருவான். அல்லாஹ்விடம் கொசுவின் இறக்கையளவு எடை கூட அவன் (மதிப்பு) பெறமாட்டான். 'மறுமை நாளில் அவர்களுக்கு எத்தகைய மதிப்பையும் அளிக்கமாட்டோம்' எனும் (திருக்குர்ஆன் 18:105 வது) இறைவசனத்தை ஓதிக்கொள்ளுங்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவித்தார். ஸஹீஹ் புகாரி : 4729

எனவே அல்லாஹ்வினுடைய இவ்வேதம் மனிதனுக்கு அருமருந்தாகவும், ஆறுதலாகவும் மனிதனை தூய்மைப்படுத்தி வெற்றியின் பக்கம் கொண்டு செல்லக் கூடியதாகவும் இருக்கின்றது. நிச்சயமாக நாம் வாழ்வில் இறை வேதத்தைப் பின்பற்றும் காலமெல்லாம் வெற்றியில் தான் நிலைத்திருப்போம் இன்ஷா அல்லாஹ்!

நம் வாழ்வில் ஏற்படும் எவ்வித பிரச்சினையாக இருந்தாலும் அதற்கு அல்லாஹ்வின் வேதத்தின் அடிப்படையில் தீர்ப்பு சொல்ல வேண்டும். நாம் வாழ்க்கையை குர்ஆனோடு தொடர்புடைய வாழ்க்கையாக அமைத்துக் கொண்டு ஈருலக வெற்றியை பெறுவோமாக! இன்ஷா அல்லாஹ்! 'தொடரும்'..

# ஷரஹ் சுன்னா

மௌலவி பஷீர் ஃபிர்தவ்ஸி, துணை ஆசிரியர்

இமாம் பர்பஹாரி(ரஹ்) அவர்கள் கூறினார்கள், “(முதல் பத்து நபித்தோழர்களான) இவர்களுக்குப் பின் மக்களில் சிறந்தவர்கள் மற்ற நபித்தோழர்கள்!.

அதாவது, நபியவர்கள் தூதராக அனுப்பி வைக்கப்பட்ட காலகட்டத்தைச் சார்ந்தவர்கள். அவர்களில் முதல் முன்னோடிகள், முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகள் ஆவார்கள்.

அவர்கள்தாம் இரண்டு கிப்லாவையும் முன்னோக்கி தொழுதவர்கள்..

இவர்களுக்குப் பின் மக்களில் சிறந்தவர்கள் அல்லாஹ்வின் தூதருடன் ஒரு நாளோ, ஒரு மாதமோ, ஒரு வருடமோ அல்லது அதைவிட கூடுதலாகவோ குறைவாகவோ தோழமைக் கொண்டவர்கள் ஆவர். அவர்களுக்கு கருணை வேண்டி பிரார்த்தியுங்கள். அவர்களின் சிறப்புகளை நினைவு கூருங்கள். அவர்களின் தவறுகளில் மௌனம் காத்திடுங்கள். அவர்களில், ஒருவரைப் பற்றியும் நன்மை அல்லாதவற்றை பேசாதீர்கள்.

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள், “என் தோழர்களின் பெயர் சொல்லப்பட்டால் உங்கள் நாவுகளை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

நூல் :முஃஜமுத்தப்ரானி. 10302

இமாம் இப்னு உயைய்னா(ரஹ்) அவர்கள் கூறினார்கள், அல்லாஹ்வின் தூதரின் தோழர்களை ஒருவன் குறைகூறினால் அவன் மனோஇச்சையை பின்பற்றுபவன் ஆவான்.

**விளக்கம்**

அன்ஸார்களை விட முஹாஜிர்களை முற்படுத்தியிருப்பதிலிருந்து அன்ஸார்களைவிட முஹாஜிர்கள் சிறப்பானவர்கள் என்றும் அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்ததால் இச்சிறப்பு இருப்பதை தெரிவிக்கிறது. ஏனெனில் அவர்கள் தங்களது செல்வத்தையும் நாட்டையும் விட்டு விட்டு வந்தவர்கள் ஆவார்கள். அல்லாஹ் பல்வேறு வசனங்களில் அன்ஸார்களைவிட முஹாஜிர்களை முற்படுத்தியிருக்கிறான்.

இன்னும் முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும், முதலாவதாக (ஈமான் கொள்வதில்) முந்திக்கொண்டவர்களும், அவர்களை(எல்லா) நற்கருமங்களிலும் பின் தொடர்ந்தவர்களும் இருக்கின்றார்களே அவர்கள் மீது அல்லாஹ் திருப்தி அடைகிறான்; அவர்களும் அவனிடம் திருப்தியடைகின்றார்கள்; அன்றியும் அவர்களுக்காக, சுவனபதிகளைச் சித்தப்படுத்தியிருக்கின்றான், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும், அவர்கள் அங்கே என்றென்றும் தங்கியிருப்பார்கள் இதுவே மகத்தான வெற்றியாகும். *(9:100)*

எவர்கள் தம் வீடுகளையும், தம் சொத்துகளையும் விட்டு, அல்லாஹ்வின் அருளையும், அவன் திருப் பொருத்தத்தையும் தேடியவர்களாக வெளியேற்றப்பட்டனரோ அந்த ஏழை முஹாஜிர்களுக்கும் (ஹிஜ்ரத் செய்தவர்களுக்கும் அப்பொருளில் பங்குண்டு); அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் உதவி செய்து கொண்டிருக்கின்றனர் அவர்கள் தாம் உண்மையாளர்கள். *(59:8,9)*

நிச்சயமாக அல்லாஹ் நபியையும் கஷ்ட காலத்தில் அவரைப் பின்பற்றிய முஹாஜிர்களையும், அன்ஸாரிகளையும் மன்னித்தான் அவர்களில் ஒரு பிரிவினருடைய நெஞ்சங்கள் தடுமாறத் துவங்கிய பின்னர், அவர்களை மன்னித்(து அருள் புரிந்)தான் நிச்சயமாக அவன் அவர்கள் மீது மிக்க கருணையும், கிருபையும் உடையவனாக இருக்கின்றான். *(9:117)*

அன்ஸார்கள் என்றால் அகபா உடன்படிக்கையில் அல்லாஹ்வின் தூதரிடம் உடன்படிக்கை செய்த மதீனாவைச்சார்ந்த அவுஸ்,கஸ்ரஜ் சமுதாயத்தைச்சார்ந்த நம்பிக்கையாளர்கள் ஆவார்கள். இவர்களிடம் நபி அவர்கள் ஹிஜ்ரத் செய்துவந்தார்கள் அவர்கள் அல்லாஹ்வின் தூதருக்கு உதவிசெய்தார்கள், அவர்களுக்கு பக்கபலமாக இருந்தார்கள் இன்னும் அவர்களுக்கு அடைக்கலமும் வழங்கினார்கள். இவர்களைக் குறித்து அல்லாஹ் கூறினான்: 'இன்னும் சிலருக்கும் (இதில் பங்குண்டு; அவர்கள் மதீனாவில் முஹாஜிர்களுக்கு) முன்னரே ஈமானுடன் வீட்டை அமைத்துக் கொண்டவர்கள்; அவர்கள் நாடு துறந்து தங்களிடம் குடியேறி வந்தவர்களை நேசிக்கின்றனர்; அன்றியும்

அ(வ்வாறு குடியேறி)வர்களுக்குக் கொடுக்கப் பட்டதிலிருந்து தங்கள் நெஞ்சங்களில் தேவைப்பட மாட்டார்கள்; மேலும், தங்களுக்குத் தேவையிருந்த போதிலும், தங்களைவிட அவர்களையே (உதவி பெறுவதற்குத் தக்கவர்களாகத்) தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள் இவ்வாறு எவர்கள் உள்ளத்தின் உலோபித்தனத்திலிருந்து காக்கப்பட்டார்களோ, அத்தகையவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள். (59:9)

இஸ்லாமிற்கு வருவதற்கு முன் அவுஸ், கஸ்ரஜ் என்று தான் இவர்கள் அழைக்கப்பட்டார்கள் அல்லாஹ்வின் தூதருக்கு உதவுவோம் என்று உடன்படிக்கை கொடுத்தபின்னர் இவர்கள் அன்ஸார் அதாவது உதவிசெய்யக்கூடியவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் .

மேற்கூறிய அடிப்படையில் ஸஹாபாக்களை நான்கு படித்தரங்களாக இமாம் அவர்கள் வகுத்துள்ளார்கள்.

இமாம் இப்னு ஸஅது அவர்கள் ஐந்து படித்தரங்களாக பிரித்தார்கள். இமாம் ஹாக்கிம் அவர்கள் பன்னிரெண்டு படித்தரங்களாக வகைப்படுத்தியுள்ளார்கள்.

**முதல் படித்தரம் :** மக்காவில் இஸ்லாமைத் தழுவிய அபூபக்கர்,உமர்,உஸ்மான்,அலீ ஏனைய ஸஹாபாக்கள் ஆவார்கள். அலீ(ரழி) அவர்கள் தான் முதலில் இஸ்லாமை தழுவியவர் என்பதில் வரலாற்று ஆய்வாளர்களுக்கு மத்தியில் கருத்துவேறுபாடு இருப்பதாக நான் அறியவில்லை. அந்நேரத்தில் அவர் பருவவயதை அடைந்திருந்தாரா இல்லையா என்பதில் தான் கருத்துவேறுபாடுள்ளது. பருவவயதை அடைந்தவர்களில் அபூபக்கர் அவர்கள் தான் முதலில் இஸ்லாமை தழுவியவர் என்பது அனைவரிடமும் சரியான கருத்தாகும்

அம்ர் பின் அபசா அஸ்ஸுலமீ (ரலி) அவர்கள் கூறியதாவது:' இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டவர் யார் உங்களுடன் இருக்கின்றார்கள்?' என அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் "ஒரு சுதந்திரவானும் ஓர் அடிமையும் உள்ளனர்" என்றார்கள். (அன்றைய நாளில் அபூபக்ர் (ரலி) அவர்களும் பிலால் (ரலி) அவர்களும் நபியவர்களை ஏற்று அவர்களுடன் இருந்தனர்). நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

**இரண்டாவது படித்தரம்:** தாருன் நத்வாவில் ஒன்று கூடிய தோழர்கள் உமர்இஸ்லாத்தை தழுவி அதை பகிரங்கப்படுத்தியபோது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அவரை தாருன்நத்வாவிற்கு அழைத்துசென்றார்கள் அங்கே வைத்து மக்காவாசிகளில் சிலர் அல்லாஹ்வின் தூதரிடம் பைஅத் செய்தார்கள். (இவ்வாறு தான் இமாம் ஹாகிம் அவர்கள் கூறியுள்ளார்கள் என்றாலும் இதில் சந்தேகம் உள்ளது அது தாருல் அர்கமாக இருக்கலாம்.)

**மூன்றாவது படித்தரம்:** அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தவர்கள்.

**நான்காவது படித்தரம்:** அகபா உடன்படிக்கையின் போது அல்லாஹ்வின் தூதரிடம் உடன்படிக்கைசெய்து கொண்டவர்கள்.

**ஐந்தாவது படித்தரம்:** இரண்டாவது அகபா உடன்படிக்கையின் போது அல்லாஹ்வின் தூதரிடம் உடன்படிக்கைசெய்து கொண்டவர்கள் அதில் அதிகமானவர்கள் அன்ஸாரிகள் ஆவார்கள்.

**ஆறாவது படித்தரம்:** அல்லாஹ்வின் தூதர் மதீனாவிற்குள் நுழைவதற்கும் அங்கே மஸ்ஜிதை எழுப்புவதற்கும் முன் குபாவில் இருக்கும் போது முதலில் ஹிஜ்ரத் செய்துவந்தடைந்தவர்கள் .

**ஏழாவது படித்தரம்:** பத்ருப்போரில் கலந்துகொண்டவர்கள்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இவர் பத்ர் போரில் கலந்துகொண்டிருக்கிறார். உமக்கென்ன தெரியும்? ஒரு வேளை அல்லாஹ் பத்ர் போரில் கலந்துகொண்டவர்களைப் பார்த்து, 'நீங்கள் விரும்பியதைச் செய்துகொள்ளுங்கள். உங்களை நான் மன்னித்துவிட்டேன்' என்று கூறிவிட்டிருக்கலாம்" என்று சொன்னார்கள்.

நூல் ஸஹீஹுல் புஹாரி **3007**

**எட்டாவது படித்தரம்:** பத்ருப்போருக்கும் உஹதுப்போருக்கும் இடைப்பட்டக்காலத்தில் ஹிஜ்ரத் செய்தவர்கள்

**ஒன்பதாவது படித்தரம்:** பைஅத் ரிள்வானில் கலந்துகொண்டவர்கள் இவர்கள் விஷயத்தில்

தான் அல்லாஹ் வசனத்தை இறக்கினான்

நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கையாளர்களை - அவர்கள் மரத்தடியில் வாக்குறுதி செய்தபோது பொருந்திக் கொண்டான், பின்னர், அவர்களின் இதயங்களிலிருந்ததை நன்கறிந்து, அவர்கள் மீது அமைதியை இறக்கிவைத்தான், அன்றியும், சமீபமான வெற்றியையும் அவர்களுக்கு (அருட்கொடையாக)க் கொடுத்தான். (48:18)

பைஅத் ரிளுவான் என்பது உம்ராவிற்காக வந்த அல்லாஹ்வின் தூதர் ஹுதைபிய்யாவில் வைத்து தடுக்கப்பட்டடு உஸ்மான்(ரலி) அவர்கள் குறைஷிகளால் கொல்லப்பட்டதாக தகவல் பரவியபோது குரைஷியருடன் உறுதியுடன் இறுதிவரை போரிடுவோம் என்று நபித்தோழர்கள் நபியிடம் கொடுத்த உறுதிமொழியாகும்.

ஹுதைபிய்யா என்பது ஒரு கிணராகும் அதன் அருகில் ஒரு மரம் இருந்தது பிறகு அந்த மரம் பெருவெள்ளத்தில் காணமல் போய்விட்டது.

முசய்யப் பின் ஹஸ்ன் (ரலி) அவர்கள் கூறியதாவது: “(பைஅத்துர் ரிள்வான் எனும் உறுதிப் பிரமாணம் நடைபெற்ற) அந்த மரத்தை நான் பார்த்திருந்தேன். பின்பு (ஒருமுறை) அங்கு நான் வந்தேன். அப்போது என்னால் அதை அறிய முடியவில்லை. நூல் ஸஹீஹுல் புஹாரி 4162

ஹஜ்ஜிற்கு செல்லும் சில பாமரர்கள் அந்த மரம் மினாவிற்கும் மக்காவிற்கும் இடையில் உள்ளது என்று கூறுவது தவறான கருத்தாகும்.

**பத்தாவது படித்தரம்:** ஹுதைபிய்யாவிற்கும் மக்காவெற்றிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஹிஜ்ரத் செய்தவர்கள் இதில் ஹாலித் பின் வலீத், அம்ருபினில் ஆஸ், அபூஹுரைரா ஆகியோரும் இன்னும் ஏராளமானவர்களும் அடங்குவார்கள்

கைபரின் கனீமத்கள் வந்தபோது அல்லாஹ்வின் தூதர் ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஹிஜ்ரத் செய்து வந்தவர்களுக்கு அதிலிருந்து வழங்கினார்கள்.

**பதினொராவது படித்தரம்:** மக்கா வெற்றியின்போது இஸ்லாமைத் தழுவியவர்கள் இதில் குரைஷியர்களில் அதிகமானவர்கள் அடங்குவார்கள் அவர்களில் கட்டுப்பட்டு இஸ்லாமைத் தழுவியவர்களும் உண்டு,வாளுக்கு பயந்து இஸ்லாமைத் தழுவி பின்னர் மதம் மாறியவர்களும் உண்டு. அவர்கள் தங்களது உள்ளத்தில் மறைத்து வைத்ததையும் இன்னும் அவர்களின் நம்பிக்கையையும் குறித்து அல்லாஹ் மட்டும் தான் நன்குஅறிந்தவன்.

(இந்த கூற்று சரியல்ல காரணம் அவர்களின் இஸ்லாம் மிக அழகானதாக இருந்தது இஸ்லாமிய வெற்றிகளில் கலந்து கொண்ட சிறந்த போராளிகளாக அவர்கள் இருந்தார்கள்.)

**பணிரெண்டாவது படித்தரம்:** மக்கா வெற்றியின் போது,ஹஜ்ஜத்தில் விதா, இன்னும் இது போன்ற சந்தர்பங்களில் போது அல்லாஹ்வின் தூதர் அவர்களை பார்த்த சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் ஆவார்கள் இவர்களையும் ஸஹாபாக்களின் பட்டியலில் தான் எண்ணுவார்கள். (மஃரிஃபத்து உலூமில் ஹதீஸ்)

இவர்களுக்குப் பின் மக்களில் சிறந்தவர்கள் அல்லாஹ்வின் தூதருடன் ஒரு நாளோ, ஒரு மாதமோ, ஒரு வருடமோ அல்லது அதைவிட கூடுதலாகவோ குறைவாகவோ தோழமைக் கொண்டவர்கள் ஆவர்

நபித்தோழர்கள் யார் என்பதற்கு பல்வேறு விதமான வரைவிலக்கணம் சொல்லப்பட்டுள்ளது அதில் மிகச்சரியான கருத்து இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்கள் வழங்கிய வரைவிலக்கனமாகும்

நிச்சயமாக ஸஹாபி என்பவர் யாரெனில் அல்லாஹ்வின் தூதரை ஈமான் கொண்ட நிலையில் சந்தித்து முஸ்லிமாகவே மரணித்தவர் ஆவார். (அல் இஸாபா ஃபீ தம்யீஸிஸ் ஸஹாபா)

ஸஹாபாக்கள் மீது முஸ்லிம்களுக்குள்ள கடமை என்னவெனில் அவர்களுக்காக அல்லாஹ்விடம் அருள்வேண்டி பிரார்த்திக்க வேண்டும் அவர்களின் சிறப்புகளை நினைவுகூர வேண்டும் அவர்களிடம் ஏற்பட்ட சிறு சருகல்களுக்காக அவர்களை குறைக்கூறக்கூடாது ஏனெனில் அவர்கள் முஜ்தஹிதுகள் மனோஇச்சையை பின்பற்றுவதைவிட்டு தூரமானவர்கள் அவர்களைக்குறித்து முஸ்லிம்கள் நன்மையல்லாத வேறு எதையும் சொல்லக்கூடாது.◉

# அன்புள்ள கொள்கை சகோதரர்களுக்கு...

அஸ்ஸலாமு அலைக்கும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் எல்லோருக்கும் நோயற்ற வாழ்வையும் குறைவில்லாத செல்வத்தையும் தந்தருள்வானாக!

நாடெங்கிலும் வாழும் மக்கள் நோய்ப் பரவலின் காரணமாக மிகப் பெரிய சிரமங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகி ஓர் ஆண்டுக்கும் மேல் ஆகிறது.பல்லாயிரக்கணக்கான மக்கள் தொற்று நோயின் காரணமாக பலியாகி இருக்கின்றனர்.நிறைய மக்கள் நோய் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர். நோய் பரவலினால் ஏற்பட்ட ஊரடங்கின் காரணத்தினால் நிறைய மக்களுக்கு பொருளாதார இழப்புகள் ஏற்பட்டு சிரமங்களுக்கு உள்ளாகி உள்ளனர். உணவின்றி தவிக்கின்ற மக்களுக்கு உணவு வழங்குவதற்காக நமது 'ஜம்இய்யத்து அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ்' அமைப்பின் தமிழகத்தில் உள்ள அதிகமான கிளைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு மனித நேய சிந்தனை உள்ள மக்களிடம் இருந்து உதவிகளைப் பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் வழங்குவதில் பெறும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலன் அடைந்தனர். பசி போக்கும் இந்த பணி மிகவும் சிறந்த பணி! இறைவனுக்கு விருப்பமான பணி! என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

அதே நேரத்தில் நமது அமைப்பிலுள்ள சகோதரர்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது.. நம்முடைய மகத்தான இலட்சியம் மனிதச் சமூகத்தை அழிவில் இருந்து காப்பாற்றுவது தான். தீமைகளுக்கு எல்லாம் தலையாய தீமையான படைத்தவனுக்கு நிகராக படைப்பினங்களை ஆக்கி அவற்றிற்கு வழிபாடு நடத்துகின்ற மக்களை அதிலிருந்து காப்பாற்ற வேண்டும். படைத்தவனை நினைத்துப்பார்த்து அவன் பக்கம் எல்லோரும் திரும்ப வேண்டும் என்ற இலக்கை நோக்கி பயணிக்கக் கூடிய விஷயத்தில் உறுதியோடு இருந்து செயல்பட வேண்டும். காரணம், பசியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கி பசியில் இருந்து காப்பாற்றுவதற்கு நிறைய அமைப்புகள் இருக்கின்றன.. நிறைய பேர் அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மக்களை நரகத்திலிருந்து காப்பாற்றுகின்ற மகத்தான பணியை செய்வதற்கு அமைப்புகளும், ஆட்களும் குறைவாகவே உள்ளனர். அந்தப் பணியை நிறைவேற்றுகின்ற பொறுப்பை நமது அமைப்பில் உள்ளவர்கள் தலையில் சுமந்து உள்ளனர். அந்தப் பணியை நிறைவேற்றுவதைத்தான் தலையாய கடமையாகக் கருதி ஒவ்வொருவரும் செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அதில் எந்த தளர்வும் ஏற்பட்டுவிடக்கூடாது. நாம் செய்யும் மற்ற செயல்பாடுகள் இந்த மகத்தான இலட்சியத்தை பின் தள்ளி விடக் கூடாது.

உங்கள் நலம் நாடும்

**S.கமாலுத்தீன் மதனி**

Owned and Published by S.Kamaludeen from No.61/26, Ayyasamy Street, Pudupet, Chennai - 600 002.
Printed by Iqbal khan at Graphics Park, No.78, Big Street, Chennai - 600005. Editor: S.Kamaludeen.

# பிரஸ்டன் பன்னாட்டு கல்லூரி

10, கவிஞர் பாரதிதாசன் சாலை, ஆல்வார்ப்பேட்டை, சென்னை-18.

PRESTON INTERNATIONAL COLLEGE

2021 - 2022
கல்வியாண்டிற்கான
சேர்க்கை
நடைபெறுகிறது!!!

## B.A. இஸ்லாமியக் கல்வி

ஆங்கிலம் & தமிழ் - வழிக்கல்வி

(தமிழ்நாடு திறந்தநிலை
பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது)

### 1 முறைசார்

- நேரடி பயிற்சி
- இ-கற்றல் மையம்
- கல்வி நிகழ்வுகள்
- கூடுதல் பாடங்கள்
- தாவா பயிற்சி
- பணிவாய்ப்பு வழிகாட்டல்
- ஆய்வரங்கு
- கல்விச் சுற்றுலா

### 2 நிகழ்நிலை

புதிய !!!

- நேரடி பயிற்சி
- இ-கற்றல் மையம்
- கல்வி நிகழ்வுகள்
- அவ்வப்போது மதிப்பிடுதல்
- சான்றளிப்பு

(சென்னைக்கு வெளியே
வசிக்கும் மாணவர்களுக்கு)

### 3 தொலைநிலை

- பல்கலைக்கழக உதவி
- பாட புத்தகங்கள்
- அவ்வப்போது மதிப்பிடுதல்
- இ-கற்றல் மையம்
- ஆய்வரங்கு

**தகுதி: +2**

மேலும்
விவரங்களுக்கு:
+91 99416 78784

ஆன்லைனில்
விண்ணப்பிக்க:
WWW.PRESTONCHENNAI.AC.IN

இந்த ஆண்டு முதல் (2021-2022)
முதுகலைப்பட்டம் (MA) ஆன்லைன் வகுப்புகள் தமிழ் மொழியில்
தகுதிகள் : இளங்கலை பட்டம் மற்றும் அரபியில் புலமை

Aljannath Postal Register No. TN/ARD/26/2021-2023

**Date of Published:**
**1st of Every Month**

Regd with Registrar of News Paper for India Under No. T.N.TAM-2000/600

Licensed to post without prepayment WPP No. TN/PMG (CCR) WPP 493/2021-2023

Posted at Egmore RMS/1, Patrika Channal, Chennai-8. Posted between 1 - 4 (June 2021)

**If Undeliver, Please Return to : ALJANNATH , 26, Ayyasamy Street, Pudupet, Chennai - 600002.**

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# معهد المنار لتحفيظ القرآن الكريم

# அல்மனார் குர்ஆன் மனன மையம் ( Runby JAQH )

ALMANAAR QURAN MEMORIZATION INSTITUTE

**மஸ்ஜிதுல் முஸ்லிமீன் வளாகம்,** 26, வின்சென்ட் ரோடு, கோட்டை, கோயமுத்தூர் – 01.

**அல்லாஹ்வின் கிருபையால் 2015 ஆம் ஆண்டு முதல் கோவையில் சிறப்பாக செயல்பட்டு வரும் உணவு, ஹாஸ்டல் வசதியுடன் கூடிய குர்ஆன் மனனமையம்**

இதுவரை **17 மாணவர்கள் ஹாஃபிழ் பட்டம்** பெற்றுள்ளனர்

## புதிய சேர்க்கை நடைபெறுகிறது

**மாணவர் தகுதிகள்**

1. வயது வரம்பு 8 முதல் 11 வரை
2. குர்ஆனை பார்த்து சரளமாக ஓத தெரிந்திருக்க வேண்டும்

**சிறப்பம்சங்கள்**

* நான்கு வருட கல்வித்திட்டம்.
* அனுபவமிக்க ஆசிரியர்கள்.
* தஜ்வீது, கிராஅத் பயிற்சி.
* திக்ர், துஆ, தொழுகை பயிற்சி வகுப்புகள்.
* இஸ்லாமிய கொள்கை (அகீதா) வகுப்புகள்.
* ஆரோக்கியமான உணவு மற்றும் மருத்துவ வசதி.
* வாராந்திர உடற்பயிற்சி வகுப்பு.
* மாணவர்களின் விளையாட்டுக்கான நேரம்.
* இறையச்சத்தையும், இஸ்லாமிய அறிவையும் பெறும் வாய்ப்பு.
* பாதுகாப்பான, ஆரோக்கியமான சூழலுடன் கட்டில், மெத்தை வசதியுடன் கூடிய தங்கும் விடுதி.
* விசாலமான, காற்றோட்டமுள்ள வகுப்பறைகள்.
* இறுதியாண்டில் பள்ளிப்படிப்பை தொடரும் வசதி.
* மாநில அளவில் நடைபெறும் கிராஅத் போட்டிகளில் மதரஸா மாணவர்கள் பங்கேற்று தேர்ச்சி பெற பயிற்சிகள்.








இப்பணிகள் அனைத்தும் அல்லாஹ்வின் கிருபையால் நல்லுள்ளம் கொண்ட சான்றோர்களின் உதவிகளால் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. அல்லாஹ்விடத்தில் நிரந்தர நன்மைகளை பெற்றுத்தரக்கூடிய இப்பணிகள் மேலும் சிறப்பாகவும், தங்கு தடையின்றியும் தொடர அல்லாஹ்வின் பாதையில் உங்கள் நன்கொடைகளை இம்மதரஸா வளர்ச்சிக்காக தந்துதவுங்கள்.

**Run by JAQH : JAMIYYATHU AHLIL QURAAN VAL HADHEES**

**COIMBATORE DISTRICT** Contact : 93448 76476, 94437 58951, 0422 - 4204030